
ISBN:978-81-687049-6-1

108

செந்தமிழறிஞர்கள்

நீல பத்மநாபன்






பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/156--%E0%AE%A8%E0%AF%80%E0%AE%B2%E0%AE%AA%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%AE%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%AA%E0%AE%A9%E0%AF%8D_1938

செந்தமிழ்சிற்பிகள்

நீலபத்மநாபன் (1938)



அறிமுகம்

நீல பத்மநாபன் (நீலகண்டப்பிள்ளை பத்மநாபன்) (பிறப்பு: ஏப்ரல் 26, 1938) தமிழ் எழுத்தாளர். யதார்த்தவாத-இயல்புவாத அழகியலின் முன்னோடிகளில் ஒருவராக விமர்சகர்களால் கருதப்படுபவர். நீல பத்மநாபன் கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் என்னும் ஊரில் ஏப்ரல் 26, 1938 அன்று பிறந்தார். தந்தை நீலகண்டப்பிள்ளை. தாய் ஜானகி அம்மாள். இவருடைய தந்தை திருவனந்தபுரத்தில் மரக்கடை ஒன்றில் பணியாற்றினார். ஆகவே இளமைப்பருவம் திருவனந்தபுரத்தில் கழிந்தது. நாலாஞ்சிறை எனும் இடத்திலிருந்த மார் இவானியேஸ் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் (Intermediate) தேறினார்.கேரளப் பல்கலைக் கழகக் கல்லூரியில் 1956-1958-ம் ஆண்டுகளில் இயற்பியல் பயின்று இளங்கலை (BSc.) பட்டம் பெற்றார். கேரளப் பணியாளர் தேர்வாணைய தேர்வில் வென்று திரிச்சூரில் சிலகாலம் இளநிலை அரசு ஊழியராகப் பணியாற்றினார். அவ்வேலையை துறந்து

பொறியியல் கல்லூரியில் சேர்ந்து மின்பொறியியலில் இளங்கலைப் பட்டம் (B.Sc. Electrical Engineering) பெற்றார்.

இலக்கியப் பணிகள்

நீலபத்மநாபனின் முதல் படைப்பு 'பதில் இல்லை' என்னும் சிறுகதை. இது 1956-ல் கல்லூரி மலரில் வெளியாகியது. அப்போது அவருக்கு வயது 18. உதயதாரகை என்னும் நாவலை தன் 20-வது வயதில் எழுதினார். ஆனால் அது 1980-ல்தான் வெளிவந்தது. அவருடைய இரண்டாம் நாவலான இஞ்சீனியர் 1965-ம் ஆண்டு வெளிவந்தது. மொழியியல் அறிஞர் வ.ஐ. சுப்ரமணியம் அதற்கு முன்னுரை எழுதியிருக்கிறார். 1968-ல் வெளிவந்த மூன்றாவது நாவலான தலைமுறைகள் தான் விமர்சகர்களின் கவனத்தைப் பெற்றது.

நீல பத்மநாபன் எழுதிய தேரோடும் வீதி என்னும் நாவல் இலக்கியப்பூசல் தன்மை கொண்டது. இதில் ஓர் எழுத்தாளன் தன் படைப்புக்களை அச்சில் கொண்டுவர படும் துயரங்களை விரிவாக எழுதியிருக்கிறார். இது அவருடைய தனியனுபவங்களை ஒட்டிய சித்திரம்.

நீல பத்மநாபன் பெரும்பாலும் தன் சொந்தவாழ்க்கையின் அணுக்கமான சாயல் கொண்ட படைப்புகளை எழுதுபவர். பெரும்பாலான கதைகள் அவர் பிறந்த இரணியல், அவர் வாழும் திருவனந்தபுரம் ஆகிய ஊர்களைக் களமாகக் கொண்டவை. அவருடைய குடும்பப்பின்புலம், அவருடைய அலுவலகச்சூழல் ஆகியவற்றை ஒட்டிய புனைவுகளாக தலைமுறைகள், உறவுகள், மின்னுலகம் ஆகிய நாவல்கள் அமைந்துள்ளன.

நீல பத்மநாபன் கவிதைகள் நேரடியான உணர்ச்சிப்பெருக்குகளாக அமைபவை.யாப்பில்லாமல் ஓசையொழுங்குடன் அமைந்த அக்கவிதைகளில் ஐயப்பப் பணிக்கர் போன்றவர்கள் எழுதிய யாப்பற்ற ஆனால் இசையமைதி கொண்ட மலையாளக் கவிதைகளின் அழகியல் செல்வாக்கு உண்டு.

பொதுவாக உறவுகளிலும், அரசு குடும்பம் போன்ற அமைப்புக்களிலும் சிக்கி சிதைவுறும் எளிய மனிதர்களின் வாழ்க்கையை நீல பத்மநாபன் எழுதினார்.

நீல பத்மநாபன் திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கத்துடன் தொடர்புகொண்டு இலக்கியச் செயல்பாடுகளை ஒருங்கிணைத்திருக்கிறார். சிறுகதைகளுக்காக 'நீலபத்மம்' என்னும் இலக்கிய விருது திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம் சார்பில் வழங்கப்படுகிறது.கவிதைகளுக்காக தலைமுறைகள் விருது வழங்கப்படுகிறது. அவருடைய பிறந்தநாளான ஏப்ரல் 26 அன்று இவ்விருது அளிக்கப்படுகிறது.

விருதுகளும் பரிசுகளும்

- ராஜா அண்ணாமலைச் செட்டியார் பரிசு 1977 (உறவுகள்)
- தமிழ் அன்னை விருது 1988
- சாகித்திய அகாதமி விருது 2007 (இலை உதிர் காலம்)
- கோவை கஸ்தூரி சீனிவாசன் அறநிலையத்தின்ரங்கம்மாள் பரிசு (இலையுதிர்காலம்)
- மொழிபெயர்ப்பிற்கான சாகித்திய அகாதமி விருது
- தமிழ்நாடு அரசு விருது
- மைசூர் சிஐஐஆரின் பாஷா பாரதி பரிசு

படைப்புகள்

தமிழ் நூல்கள்

- தலைமுறைகள் - ஜெயக்குமாரி ஸ்டோர் வெளியீடு, நாகர்கோவில், 1968
- பள்ளிகொண்டபுரம் - வாசகர் வட்டம், 1970
- பைல்கள் - ஜெயக்குமாரி ஸ்டோர் வெளியீடு, நாகர்கோவில், 1973
- உறவுகள் - ஜெயக்குமாரி ஸ்டோர் வெளியீடு, நாகர்கோவில், 1975
- மின் உலகம் - 1976
- நேற்று வந்தவன் - 1978
- உதய தாரகை - 1980
- வட்டத்தின் வெளியே - 1980
- பகவதி கோயில் தெரு - 1981
- போதையில் கரைந்தவர்கள் - 1985

- தீ தீ - 1987
- முறிவுகள் - 1987
- தேரோடும் வீதி (தன்வரலாற்றுப் புதினம்) - 1987

சிறுகதைத் தொகுதிகள்

- மோகம் முப்பது ஆண்டு (11 சிறுகதைகள்), 1969
- சண்டையும் சமாதானமும் (11 சிறுகதைகள்), 1972
- மூன்றாவது நாள் (11 சிறுகதைகள்), 1974
- இரண்டாவது முகம் (19 சிறுகதைகள்), 1978
- நாகம்மாவா? (15 சிறுகதைகள்), முத்துப்பதிப்பகம், மதுரை, 1978
- சிறகடிகள் (13 சிறுகதைகள்), 1978
- சத்தியத்தின் சந்நிதியில் (15 சிறுகதைகள்), 1985
- வான வீதியில் (18 சிறுகதைகள்), 1988
- அவரவர் அந்தரங்கம் (11 சிறுகதைகள்), 1998
- பிறவிப் பெருங்கடல் (2008)
- கொட்டாரம் (என்னைப்போல் இருவர், ரௌத்திரம், நொண்டிப் புறா, பூஜை அறை, பகை, கொட்டாரம்) , வானதி பதிப்பகம், சென்னை, 2012

கவிதைத் தொகுதிகள்

- நீல பத்மநாபன் கவிதைகள், எழுத்து பதிப்பகம் சென்னை, 1975
- நா காக்க, 1984
- பெயரிலென்ன, 1993

கட்டுரைத் தொகுதிகள்

- சிதறிய சிந்தனைகள் (17 கட்டுரைகள்), அகரம், சிவகங்கை, 1978
- இலக்கியப் பார்வைகள் (13 கட்டுரைகள்), அமிழ்தம் பதிப்பகம், வேலூர், 1988
- சமூகச் சிந்தனை (18 கட்டுரைகள்), அமிழ்தம் பதிப்பகம், வேலூர், 1991

- யாரிடமும் பகையின்றி (21 கட்டுரைகள்), அமிழ்தம் பதிப்பகம், வேலூர், 1993
- வாழ்வும் இலக்கியமும் (14 கட்டுரைகள்), அமிழ்தம் பதிப்பகம், வேலூர், 1997
- நவீன இலக்கியம் - சில சிந்தனைகள் (18 கட்டுரைகள்), அமிழ்தம் பதிப்பகம், வேலூர், 2001
- இன்றைய இலக்கியச் செல்நெறிகள் (30 கட்டுரைகள்), இராசராசன் பதிப்பகம், சென்னை 17, 2003
- ஐயப்ப பணிக்கரின் ஆளுமையும் சில படைப்பு மாதிரிகளும், விருட்சம், சென்னை, 2006
- உணர்வுகள் சிந்தனைகள் (137 கட்டுரைகள்), நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2008
- பார்வைகள் மறுபார்வைகள், 2010

நாடகத்தொகுதி

- தனிமரம் - 2009

திரட்டுநூல்

- குருக்ஷேத்திரம் - 1976

மொழிபெயர்த்துத் தொகுத்தவை

- தற்கால மலையாள இலக்கியம் - 1985, நர்மதா பதிப்பகம், சென்னை.

  மதிலுகள் - நவீன மலையாள இலக்கியம் - 2000, காவ்யா, சென்னை

- ஐயப்பப் பணிக்கரின் கவிதைகள் - 1999
- ஐயப்பப் பணிக்கரின் கோத்ர யானம் - 2002

மலையாளப்படைப்புக்கள்

நாவல்கள்

- பந்தங்கள் - 1979
- மின் உலகம் - 1980
- தலைமுறைகள் - 1981

- பள்ளிகொண்டபுரம் - 1982
- தீ தீ - டி.சி. புக்ஸ், கோட்டயம், 1990

சிறுகதைகள்

- கதைகள் இருபது (20 கதைகள்), கரண்ட் புக்ஸ் கோட்டயம், 1980
- எறும்புகள் (20 கதைகள்), கரண்ட் புக்ஸ் கோட்டயம், 1987
- அர்கண்ட் கோனில் (20 கதைகள்), கரண்ட் புக்ஸ் கோட்டயம், 1997
- வேறத்தவர் (23 கதைகள்), கரண்ட் புக்ஸ் கோட்டயம், 2003

கவிதைகள்

- நீல. பத்மநாபன்ட கவிதைகள் - விஸ்வம் புக்ஸ், திருவனந்தபுரம், 2003

கட்டுரைகள்

- சிருஷ்டியிலே நொம்பரங்கள் - கரண்ட் புக்ஸ், கோட்டயம், 2006

ஆங்கில மொழியாக்கங்கள்

- Generations - Tr Ka. Naa. Subramaniam
- Where the Lord Sleeps - Tr. M Dakshinamurthy.
- SURRENDER AND OTHER POEMS - 1982
- POEMS BY NEELA PADMANABHAN - 2005
- THE INCARNATION (20 Short Stories) - 1987
- RELATIONS (novel) - 2003
- Birds in the Cage (novel) - Tr. M. Vijayalaxmi Qureshi
- Neela Padmanabhan - A Reader (An anthology of complete works), Ed. By Prema Nandakumar, Sahitya Akademi, New Delhi (in print)

நீல பத்மநாபனின் படைப்புகள் பற்றிய திறனாய்வுகள்

- நீல பத்மநாபனின் இலக்கியத்தடம் - 1999
- நீல பத்மநாபன் படைப்புலகம் - 2001
- Neela Padmanabhan - A Reader(An anthology of complete works), Ed. By Prema Nandakumar, Sahitya Akademi, New Delhi.

நீல பத்மநாபன் தமிழிலும் மலையாளத்திலும் தொடர்ந்து எழுதி வருகிறார்.

(😊)(😊)(😊) ஓஓஓஓஓஓஓஓ (😊)(😊)(😊)

நீல பத்மநாபனின் நாவல்கள்

சாதாரணத்துவத்தின் கலை

ஜெயமோகன்

https://old.thinnai.com/%E0%AE%A8%E0%AF%80%E0%AE%B2_%E0%AE%AA%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%AE%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%AA%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D/

தமிழிலக்கியத்தில் நுழையும் ஒரு வாசகன் நீலபத்மநாபனைப்பற்றி குழப்பமான ஒரு சித்திரத்தையே அடைவான் . அவரது பெயர் அதிகமாக எங்குமே மேற்கோள் காட்டப்படுவது இல்லை.அவரது படைப்ப்புக்கள் பேசப்படுவதுமில்லை. அவரைப்பற்றி பொதுவான கருத்தைக் கேட்டால் கணிசமான சமகால வாசகர்கள் அவர் தமிழிலக்கியத்தின் கடந்தகாலத்து நினைவுகளில் ஒன்று மட்டுமே என்று சொல்லவும் கூடும். இன்று அவருடைய படைப்புகள் ,அவரது பாணி ஏதும் அவ்வளவு முக்கியமில்லை என்ற எண்ணம் பரவலாக உள்ளதை அவன் காண்பான்.பல எளிய இளம் வாசகர்கள் உடனடியாக அவரை ஒதுக்கிவிடுவதுமுண்டு . அதேசமயம் தமிழ் நாவல்கள் பற்றிய எந்த ஒரு விமரிசனத்திலும் , எந்த பட்டியலிலும் அவரது இரு நாவல்கள் 'தலைமுறைகள் ' , 'பள்ளிகொண்ட புரம் ' இடம் பெற்றிருப்பதையும் அவன் காண்பான்.மிகப் பெரும்பாலான விமரிசகர்களுக்கு அவர்களுடைய மிகச்சிறிய பட்டியலில்கூட கடந்த முப்பத்தைந்து வருடங்களாக அப்படைப்புகளை தவிர்க்க முடியவில்லை என்பது ஓர் எளிய விஷயமல்ல . இந்த நிலை அவ்வாசகனுக்கு ஒரு ஆழமான குழப்பத்தை ஏற்படுத்தக்கூடும்.

நீல பத்மநாபனின் இலக்கிய பங்களிப்பின் முக்கியப்பகுதி அவருடைய இளமைப்பருவத்திலேயே நடந்து விட்டது என்பது ஒரு வகையில் சோகமானது . அதன் பின்பு மெல்ல மெல்ல காலம் தன்னை கடந்து முன் செல்வதை கண்டபடி அவர் பின்தங்கி நிற்க வேண்டியிருந்தது. இலக்கிய வாதிக்கு அங்கீகாரமும் புகழும் அவசியம் கிடைக்க வேண்டிய முதிய காலத்தில் அவர் பழையவராக கணிக்கவும் படுகிறார் .

எந்தபடைப்பாளியையும் எப்போதாவது ஒரு நாள் காலம் கடந்து செல்லும். எப்போதைக்குமான படைப்பாளிகள் என்று நமக்கு தோன்றிக் கொண்டிருந்த ஒரு படைப்பாளி சட்டென்று காலத்தின் எல்லைக்கோட்டுக்கு அப்பால் நிற்பதை நாம் பார்க்கும் அனுபவம் இலக்கியத்தில் மிக வியப்பும் பிரமிப்பும் சில சமயம் அச்சமும் தருவதாகும்.

என் அனுபவத்தில் எனது 20 வயதில் என் அம்மாவிற்கு பிடித்த எழுத்தாளரான ஹெமிங்வே அறிமுகமானபோது அவரே என்றென்றும் மாறாத இளமையுள்ள படைப்பாளி என்று எண்ணினேன்.அந்த அளவுக்கு அவரது நடையின் புதுமையும் வேகமும் என்னை ஆட்கொண்டன. ஆனால் என் 30 வயதில் சட்டென்று ஹெமிங்வே பழைய படைப்பாளியாக மாறியிருப்பதை கண்டேன் . 'மணி ஒலிப்பது எவருக்காக ' ஒரு மிகப்பழைய நாவலாக, தல்ஸ்தோயைவிட பழையதாக பட்டது. அதன் வலிமை அதிலுள்ள கறாரான புறவயமொழியில் உள்ளது . வன்முறையை சித்தரிக்கும்போது அது இயந்திரங்களின் நுட்பமும் லாவகமும் கொண்டு விடுகிறது .அன்றைய என் மனப்பிம்பம் என்னவென்றால் ஹெமிங்வே பழைய இயந்திரவியல் காலகட்டத்தை சேர்ந்தவர் , இலக்கியத்தில் மின்னணுவியல் காலகட்டம் பிறந்துவிட்டது என்பதுதான் . . இது ஒரு மன உருவகம் ,படிமம் என்று சொல்லலாம் , மட்டுமே .ஆனால் பல சிந்தனையாளர்களை படிக்கும்போது அப்படித்தோன்றும் .எலியட்டும் ,ரஸ்ஸலும் அப்படி இயந்திரங்களின் மொழியில் பேசுவதாக எனக்கு பட்டிருக்கிறது.வெறு சிலருக்கும் அப்படி தோன்றியிருக்கலாம்.

தமிழில் அப்படி ஏற்பட்ட கால அதிர்ச்சி சமீபத்தி ல் சுந்தராமசாமியின் கதைகளையும் கட்டுரைகளையும் படிக்கும்போது ஏற்பட்டது . ஏற்கனவே ஆங்கிலம் வழியாக சமகால உலகப்படைப்புகளை படித்தபிறகு சுந்தர ராமசாமியின் பிம்பம் பற்றி ஏதும் அறியாமல் அவரை படிக்கவரும் புதுவாசகர்கள் அவரை பற்றி சாதாரணமாக மதிப்பிடுவதை கண்டிருக்கிறேன் .ஆயினும் அருகாமை அளிக்கும் திரை விலக ஒரு தருணம் வேண்டியுள்ளது. இப்போது சுந்தர ராமசாமி அடுத்த கட்ட இயந்திரவியல் இயக்கம் கொண்டவர் மட்டுமே என்று படுகிறது .அதாவது அவரது இயந்திரம் மின்னணுப் பொறியால் கட்டுப்படுத்தப்படுவது . இயந்திரத்தின் மூர்க்கமான கச்சிதத்தையும் மின்னணுக்கருவிகளின் அதி நுட்பத்தையும் அது கொண்டிருக்கிறது . ஆனால் இன்றைய எழுத்து உயிரின் கட்டற்ற வேகத்தையும் தன்னிச்சயான வளர்ச்சிப்போக்கையும் இயல்பாகக் கொண்டிருக்கிறது .

இதையொட்டி சில முக்கிய பழைய படைப்பாளிகளை மீண்டும் படித்து அவர்களை மறுமதிப்பீடு செய்யவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது . நீலபத்மநாபனின் படைப்புகளை அதன் பொருட்டு மீண்டும் வாசித்தேன்.அத்துடன் அவரது படைப்புகள் பற்றி சமீபத்தில்

வெளிவந்துள்ள விமரிசனப் பெருந்தொகுப்பும் உந்துதலாயிற்று. அப்போது ஏற்பட்ட முக்கியமான எண்ணம் நாம் இலக்கியப்படைப்புகளை சமகாலத்தில் மேலோங்கியுள்ள அழகியல் மனோபாவங்களையும் , அரசியல் சமூகவியல் கோட்பாடுகளையும் , வடிவ பிரக்ஞைகளையும் வைத்துத்தான் எப்போதும் சாதாரணமாக மதிப்பிடுகிறோம் என்று .அவையோ மிக வேகமாக காலாவதியாகிவிடுகின்றன. அத்துடன் நமது மதிப்பிடுமுறையில் எப்போதுமே ஒப்பிடுவது முக்கிய வழிமுறையாக உள்ளது .அதை தவிர்க்கவும் முடியாது ஏனெனில் படைப்பின் வாசக மதிப்பு என்பது பெரும்பாலும் ஒப்பிடப்படுவதன் மூலம் உருவாவதேயாகும். ஆனால் இம்மாதிரி ஒப்பீட்டு மதிப்பீடுகளை தாண்டி நமக்கு சில தளங்களிலேனும் விமரிசன அளவுகோல்கள் இருக்கவேண்டுமென்று ஓர் எண்ணம் ஏற்பட்டது .

உதாரணமாக எண்பதுகளில் படிக்க ஆரம்பித்தவர்கள் நவீனத்துவ அழகியலும் அதை ஒட்டிய இருத்தலியக் கோட்பாடுகளும் மைய இடத்தில் இருக்கும் போது உள்ளே வந்தவர்கள் . அதற்கு முன்பே இங்கு வந்து சேர்ந்த முற்போக்கு அழகியலும் கோட்பாடுகளும் கூட நவீனத்துவ அழகியலுடன் முயங்கி ஒரு பொது அழகியல் வடிவத்தை உருவாக்கி விட்டிருந்தன . உதாரணமாக பூமணியின் படைப்புகள் இந்த முயக்கத்தின் தெளிவான அடையாளங்கள் . ஆகவே அதுவே ஒரே அழகியலும் வடிவமும் என்ற எண்ணம் பொதுவாக வாசகர்களுக்கு ஏற்பட்டது . அக்கால விமரிசன மதிப்பீடுகளை தீர்மானிப்பதில் சுந்தரராமசாமி பெரும் பங்கு வகித்துள்ளார். கன கச்சிதமான ஒருமை கொண்ட வடிவம் , கறாரான சொற்சிக்கனம் ,மொழி மீது முழுக்கட்டுப்பாடு , கூர்ந்த சித்தரிப்பு மூலம் உருவாக்கப்படும் குறிப்பமைதி ஆகியவை அப்போது இலக்கியத்தின் அழகியல் இலக்கணங்களாக வகுக்கப்பட்டன. இவை நவீனத்துவ படைப்பின் வடிவ இலக்கணங்களே என நாம் இன்று அறிவோம். ஆனால் இலக்கியத்துக்கு எப்போதைக்குமே உரிய வடிவ இலக்கணங்களாக அவை அப்போது நம்பப்பட்டன என்பதை இப்போது அக்கால விமரிசனங்களை காணும்போது அறிய முடிகிறது .

அக்காலத்துக்கு முன்புவரை இருந்த அழகியல் வடிவங்கள் பல . கற்பனாவாத படைப்புகள், கற்பனாவாதப் பண்பு கொண்ட யதார்த்தச் சித்தரிப்புகள் முதலில் வந்தன. பிறகு கறாரான நிதரிசனப்பண்பு கொண்ட படைப்புகள் .இவை மரபிலிருந்து பெற்றுக் கொண்ட சில செவ்வியல் பண்புகளையும் கொண்டிருந்தன. அவை இந்த நவீனத்துவ வடிவ இலக்கணத்தால் அளவிடப்பட்டு பழையவையாகவும் வடிவ ரீதியான குறைப்பாடுகள் கொண்டவையாகவும் கணிக்கப்பட்டன . அக்கால படைப்புகள் குறித்து எழுபது எண்பதுகளில் வந்த எல்லா விமரிசனக்களிலும் இந்த வடிவபோதாமை சுட்டப்பட்டுள்ளது.இன்றைய படைப்புகள் கச்சிதத்துக்கு பதிலாக உள்விரிவை , பலகுரல்தன்மையை

,விவாத இயல்பை , முன்வைப்பவை .தடையற்ற உத்வேகத்தை , கட்டுக்கடங்காத மொழியை அவை கொண்டிருக்கின்றன. செதுக்கி வடிவமைக்கப்படும் குறிப்பமைதிக்கு பதிலாக வாசகனின் மொழி / வரலாற்று / அற பிரக்ஞைகளில்

உருவாக்கப்படும் அதிர்ச்சி மூலம் , அவற்றை ஒட்டு மொத்தமாக மறுகட்டுமானம் செய்வதன் மூலம் அவனை தன் புரிதல்களை முழுமையான மறுபரிசீலனைக்கு உட்படுத்துவதையே அவை தங்கள் வழிமுறையாகக் கொண்டுள்ளன.அதாவது எப்படி நவீனத்துவ வடிவம் கற்பனாவத ,நிதரிசனவாத அழகியல் வடிவங்களை பழையவையும் போதாதவையும் ஆக்கியதோ அப்படி இன்று நவீனத்துவ அழகியலும் வடிவங்களும் மாறிவிட்டிருக்கின்றன.அதாவது முன்பு சுந்தர ராமசாமியுடன் ஒப்பிடப்பட்ட நீல பத்மனாபன் பழையவராக கணிக்கப்பட்டாரென்றல் இன்று அவரும் பழையவராகை இருவரும் ஒரே வரிசையில் அமர்ந்திருக்கிறார்கள் .

நீல பத்மநாபனின் படைப்புகள் கடந்த 25 வருடங்களாக நவீனத்துவ வடிவ இலக்கணத்தால் மதிப்பிடப்பட்டு எதிர்மறைகள் சுட்டப்பட்டுள்ளன .அவை நிதரிசனப் பாங்கு உடையவை .அழகியல் ரீதியாக சொல்லப்போனால் அவை இயல்புவாதப் படைப்புகள் . அவை ‘உள்ளது உள்ளபடி ‘ ,‘ அப்பட்டமாக ‘ சொல்ல முயலக்கூடிய படைப்புகள் என்று சொல்லலாம் . நவீனத்துவ படைப்பில் இருப்பது போல மிகச்சிறந்த கதைத் தொழில்நுட்ப நிபுணன் அவற்றுக்கு பின்னால் இல்லை . படைப்பாளி எந்த அளவுக்கு இல்லாமல் இருக்கிறானோ அந்த அளவுக்கு அவை சிறந்த படைப்புகள் என்பதே அவற்றின் இலக்கணமாகும் .அவை வாழ்க்கை ஓட்டத்தின் தர்க்கத்தையே தங்கள் அழகியலாக கொண்டவை .நம்பகத்தன்மையையே முதல் தகுதியாக கொண்டவை .ஆகவே நவீனத்துவ வடிவ அழகியல்பார்வைக்கு அவை கவனமற்ற கூறுமுறை கொண்டவையாக தோன்றும். அவற்றின் வடிவம் தளர்வானதாகவும் , உத்வேகமும் கவித்துவமும் இல்லாத தட்டையான சித்தரிப்பு உள்ளவையாகவும் படும். நீலபத்மநாபன் உட்பட பல இயல்புவாதப் படைப்பாளிகள் குறித்து அவ்விமரிசனம் நவீனத்துவ விமரிசகர்களால் முன் வைக்கப்பட்டுள்ளது .வாசகர்களும் அதை ஏற்றுள்ளார்கள் .

இப்போது நவீனத்துவ வடிவ இல்க்கணங்களும் காலாவதியாகியுள்ள நிலையில் எப்படி நம் மதிப்பீடுகளை செய்வது ? வழக்கமாக வாசகர்களாக நாம் செய்வது இரண்டு தரப்பையுமே ஒட்டு மொத்தமாக நிராகரிப்பதுதான். ஆனால் அதை விமர்சகன் செய்ய முடியாது .சமகாலத்து அழகியலே உண்மையானது மேலானது என்று வாதிடுவது அபத்தம் . அதுவே மேலும் உபயோகமானது என்று சொல்வதிலேயே பொருள் உள்ளது. அதை முன்வைத்து கடந்த காலத்தை முழுக்க நிராகரிப்பது அர்த்தமில்லாதது .ஆகவேதான் பொதுவான ஓர் அழகியல் அளவுகோலை

நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டியுள்ளது . துரதிருஷ்டவசமாக தத்துவார்த்தமான தேடலுடன் செயல்படும் விமரிசகர் எவரும் நமக்கு இல்லை . இவ்வாறு பொது அளவுகோல் எனும்போது அது ஒருபோதும் இலக்கியத்தை மட்டும் சார்ந்ததாக இருக்க முடியாது என்பது வெளிப்படை .ஆகவே தான் அங்கு தத்துவமும் அறவியலும் பெரும் பங்காற்றவேண்டியுள்ளது .கறாரான எப்போதைக்குமுரிய வரையறைகளை உருவாக்க முயன்றால் அது இலக்கியப்படைப்புகள் மீதான வன்முறையாகவே முடியும்,அது எத்தனை விரிவான வரையறையாக இருப்பினும். ஆகவே அதை ஒரு நிபந்தனையகவோ ,வரையறையாகவோ இல்லாமல் இலக்கியப்படைப்புகள் சார்ந்த ஒரு தேடலாக மட்டுமே நாம் உருவாக்கிக் கொள்ளமுடியும்.அதுவே நீலபத்மனாபன் போன்ற கடந்த காலகட்டத்து படைப்பாளிக்கு நியாயம் செய்வதாக அமையும்.

[இரண்டு]

நீல பத்மநாபனின் பிரசுரமான முதல் நாவல் தலைமுறைகள் அவருக்கு 30 வயது இருக்கும்போதே வெளிவந்து விட்டது .அதை அவர் எழுதும்போது அவர் வயது 24 . நான்காண்டுகாலம் பிரசுரத்துக்கான அலைச்சல்களில் செலவாயிற்று . ல் வெளிவந்தது . முக்கிய இலக்கியவாதிகள் நீலபத்மனாபனுக்கு நண்பர்களாக இருந்தும் அந்நாவலின் முக்கியத்துவத்தை அவர்களால் உணர முடியவில்லை .பேரா1சிரியர் . ஜேசுதாசன் அந்நாவலை அடையாளம்கண்டு ஒரு முன்னுரை அளித்தார் . ஆசிரியரின் சொந்த செலவிலேயே நாவல் வெளிவந்தது . ஆனால் வெளிவந்த உடனே க .நா .சுப்ரமணியம் அதை கவனப்படுத்தினார்.அடுத்த 10 வருடங்களில் அது தமிழின் இலக்கிய வரலாற்றையே மாற்றி அமைத்தது. தி ஜானகிராமனின் ‘மோக முள் ‘ நீல பத்மனாபனின் ‘தலைமுறைகள் ‘ இரு படைப்புகளும் இரு விதங்களிலான மாதிரி படைப்புகள்[trend setters]ஆக மாறின.முதல் பாணி மெல்ல வணிக எழுத்துக்கு முன்மாதிரியாயிற்று . நுட்பத்துடன் சமத்காரமும் தளுக்கும் கலந்த பாணி அது . தலைமுறைகள் முற்றிலும் வேறுபட்டது,நேர் மாறானது.பிற்பாடு தமிழில் வெளிவந்த கணிசமான முற்போக்கு இலக்கியப்படைப்புகள் அதையே முன்னுதாரணமாக கொண்டன.அவ்வகையில் தமிழில் முதன்மையான முன்னுதாரணம் அந்நாவலே .

க நா சு இலக்கியத்தின் நேரடித்தன்மையை , அப்பட்டத்தை [அல்லது யதார்த்தத்தை ,நிதரிசனத்தை] தொடர்ந்து முன் வைத்தபடி இருந்தார் .அதற்கு காரணமிருந்தது.அன்றைய எழுத்துக்கு இரு பாணிகள் மட்டுமெ இருந்தன .ஒன்று கல்கி பாணியிலான நாடகத்தன்மையும் மிகையான

வாய்சாலமும் கலந்த கற்பனாவாதப் பாணி. இன்னொன்று புதுமைப்பித்தன் முன்வைத்த நேரடியான விமரிசனப்பாணி. இரண்டிலுமே ஆசிரியனின் அதி தீவிர இருப்பு உண்டு.ஆசிரியன் கிட்டத்தட்ட இல்லாமலாகுமளவுக்கு மறைந்து இயங்கும் ஒரு கதைகூறலை க. நா .சு விழைந்து முன்வைத்தார். தமிழ் மரபில் கற்பனாவாதப் பண்புள்ள எழுத்தும் சரி ,சீர்திருத்த பண்புள்ள எழுத்தும் சரி ,தமிழ் வாழ்விம் முக்கியமான பல தளங்களை தொட முடியவில்லை என்று க. நா. சு கருதினார் .ஆகவே க. நா .சு தேடியது அப்பட்ட மாக சமரசமோ சுவாரசியப்படுத்தலோ இல்லாமல் தமிழ் வாழ்வைப்பற்றி சொல்லும் எழுத்து முறையை.அதன் முதல் முன்னோடியை ஆர் ஷண்முக சுந்தரத்தின் 'நாகம்மாளி 'ல் கண்ட க நா சு அப்படைப்பை மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லிவந்தார்.

இந்நிலையில் வந்த 'தலைமுறைகள் ' ஒரு திருப்புமுனையாக இருந்தது .அது அப்பட்டமானது.கற்பனையே கலக்காமல் எழுதப்பட்டது போன்ற புனைவுப் பாவனை கொண்டது . இம்மி கூட மிகை இல்லாதது . வட்டார வழக்கிலேயே கதையையும் சொல்ல முயல்வது .அதாவது மைய ஓட்ட அம்சங்கள் எதுவுமே இல்லாமல் முழுக்க முழுக்க பிராந்திய வட்டாரக் கலாச்சார அடையாளத்தை நம்பி இயங்கும் படைப்பு அது. ஆகவே அதை க. நா .சு ,வெ சாமிநாதன் ஆகியோர் ஒரு முக்கிய முன்னுதாரண படைப்பாக கருதி முன்வைத்தார்கள் .இப்போதும் தமிழ் எழுத்தின் முக்கியமான வலிமை என்பது இங்குள்ள பெரும்பாலான படைப்புகளின் பிராந்திய அடையாளத்தில்தான் உள்ளது .அதற்கு வழிகாட்டிய படைப்பு இது. [இவ்வகையில் அடுத்தபடியாக குறிப்பிடப்படவேண்டிய படைப்பு ஹெப்ஸிபா ஜேசுதாசனின் புத்தம்வீடு] சமீபத்தில் குமுதம் எடுத்த ஒரு சர்வேயில் தமிழின் 10 நாவல்கள் பட்டியலில் எல்லாருடைய பட்டியலிலும் இடம் பெற்றிருந்த நாவல்களில் தலைமுறைகளும் ஒன்று .இது இப்போதும் இப்படைப்புக்கு உள்ள விமரிசக அங்கீகாரத்தை காட்டுகிறது.இன்று இப்படைப்பு அதன் இறுதிப் பகுதி கவித்துவமாக அமையாமல் நாடகத்தன்மையுடன் அமைந்துள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டாலும் ஒட்டு மொத்தமாக முக்கியமான படைப்பாகவெ கருதப்படுகிறது.

'தலைமுறை 'களின் கதை காலாகாலமாக இந்திய இலக்கியங்களின் பேசுபொருளாக உள்ள பெண்ணின் துயரம்தான் .நமது செவ்வியல் படைப்புகளிலும் சரி ,நவீன படைப்புகளிலும் சரி இவ்வாறு முக்கியமான அவலங்கள் பெண்கள் சார்ந்தவையாக இருப்பது சமூகவியல் ரீதியானகாழமான கவனத்துக்குரியது .ஏனெனில் பெண்கள் ஒடுக்கப்பட்டது உலகளாவிய நிகழ்வு ,பிற கலாச்சாரங்களில் மேலும் அதிகம் .அங்கெல்லாம் இப்படி பெண் காவியநாயகி யாக

ஆக்கப்படவில்லை . வீரர்களே முக்கியமான காவியநாயகர்கள் அங்கு . இங்கு சீதையும் கண்ணகியும் மணிமேகலையும் காவியநாயகிகள்.அர்ச்சுனன்போன்ற ஒரு வீரனை ஐதீக மரபு உருவாகியபோதே அல்லியையும் அது உர்வாக்கியது .அடுத்த கட்ட வாய்மொழிக் கதைகளில் நல்லதங்காள் போன்ற அவல நாயகிகள் உள்ளனர் .பெண் ணை மையமாக்கிய அவலக்கதைகள் நம் அமரபின் கதைச்சொத்தின் பெரும்பகுதியை அடைத்துக் கொடன .பிற்பாடு நவீன புனைகதை வடிவங்கள் இஉருவான போது அதே பாணி தொடர்ந்தது .அக்கதைகளில் மரபில் உள்ள கதைகளின் தீவிரமான சாயல் இருந்தது இயல்பே.பிறகு திரைப்படங்களில் கூட அதே மரபுநீடித்தது .வான்மீகி ராமாயணமும் , மதர் இந்தியாவும் ஒரே நேர்கோட்டில் அமைந்தவையே .

இது குறித்து அடிப்படையான ஆய்வுக் குறிப்பொன்றை டி டி கோசாம்பி சொல்லியுள்ளார். தாய்வழி சமூக அமைப்பாக இருந்து தந்தை வழி அமைப்புக்கு மாறியவையே இந்திய சமூகங்கள் ..நமது எண்ணற்ற தாய் தெய்வங்கள் அம்மரபின் தொடர்ச்சிகளே. நமது ஐதீக வாய் மொழிக்கதைகளில் அந்த வீழ்ச்சி குறியீட்டு வடிவில் முக்கிய இடம் பிடித்தது . பிறகு அத்தனை நேரடி வாழ்க்கை நினைவுப்பதிவுகளும் அந்த ஐதீக மரபில் இணைவு பெற்றன. ஆகவே காவியம் முதல் சிறிய கதை மரபு வரை வரை பெண்ணின் அவலம் முக்கிய மையமாயிற்று. இன்றும் நம் அகமன கட்டுமானத்தில் படிமங்களாக உள்ளது அந்த இறந்தகாலமே .ஆகவே நவீன இலக்கியங்கள் கூட அதே பாணியில் உள்ளன. பழிவாங்கும் உக்கிர தேவதை [பழையன்னூர் நீலி] அருள் வழங்கும் அன்னை[காஞ்சி காமாட்சி] அடக்கியளும் அன்னை [சமயபுரம் மாரி]என்று தமிழ் புனைகதைகளின் பெண் கதாபாத்திரங்களை நாம் தொல்படிம [aaன்] தர்க்கத்துக்குள் அடுக்கிப் பார்க்க முடியும்.

‘தலைமுறை ‘கள் அந்த மரபில் சகஜமாக இணைவதை அதன் தொடக்கப்புள்ளியிலேயே காணலாம். ஏழுவீட்டுச் செட்டிகளின் குடும்பத்தில் குலமரபின் வாய்மொழி ஐதீகமாக ஒரு கதை உள்ளது . அவர்களுடைய பூர்வீகம் காவிரிப்பூம்பட்டினம் .அவர்கள் அங்கிருக்கும்போது அங்குள்ள சோழ் மன்னனுக்கு விலைமதிப்பிட முடியாத சில பவளங்கள் கிடைக்கின்றன. அதில் துளைபோட்டு மாலையாக்க அங்குள்ள எல்லா பொற்கொல்லர்களும் முயன்றபோதும் முடியவில்லை .பவளங்கள் உடைந்து விடக்கூடும். என்ன செய்வதென்று மன்னன் தவித்து கடசியில் தன் அவையில் இருந்த ஒரு செட்டியாரை கூப்பிட்டு நீர் என்ன செய்வீரென்று தெரியாது நாளைக்கு விடிவதற்குள் இந்த பவளங்களுக்கு துளைபோட்டு கொண்டுவரவேண்டும் இல்லையேல் கழுத்தில் தலை இருக்காதெள என்று உத்தரவு போடுகிறான் . வீட்டுக்கு வந்த செட்டியார் கவலையுடன் இருப்பது கண்ட அவரது இரு மகள்கள் தங்கம்மையும் தாயம்மையும்தேற்றுகிறார்கள் .துளையை

தாங்கள் போட்டு விடுவதாகச் சொல்கிறார்கள் .ஊசி நுனியில் பனைவெல்லச் சாறை தொட்டு ஒவ்வொரு பவளத்திலாக ஒரு பொட்டு வைத்து அவற்றை வரிசையாக எறும்பு புற்றுக்கு முன்னால் போடு விடுகிறார்கள் .எறும்புகள் வெல்ல வாசனையை குறிவைத்து அரித்து எல்லா பவளங்களிலும் சிறு துளைபோட்டு விடுகின்றன .

இந்த விஷயம் தெரியவந்தபோது மன்னன் இத்தனை அறிவுள்ள பெண்கள் இருக்கவேண்டிய இடம் அந்தப்புரம்தான் என்று சொல்லி பெண் கேட்கிறான் . சாதியை விட்டு பெண் கொடுக்க செட்டியார் குலத்துக்கு விருப்பமில்லை . மறுக்கவும் முடியாது .ஆகவே செட்டியார் தன் வீட்டில் இருந்த நிலவறைக்குள் அப்பெண்களை போகச்சொல்லி மூடி மேலே மண்ணை நிரப்பி விட்டார். பிறகு எல்லாரும் அங்கிருந்து கிளம்பி நடந்து குமரிமாவட்டம் வந்து இரணியலில் குடியேறுகிறார்கள் . இந்தக் கதையை இந்நாவலின் முக்கிய கதாபாத்திரமான உண்ணாமுலை ஆச்சி தன் பெரனும் கதாநாயகனுமாகிய திரவியத்துக்கு குழந்தையாக இருக்கும் போது வீட்டை பெருக்கி கோலம் போட்டபடி சொல்கிறாள் .குறியீட்டு ரீதியாகப்பார்த்தால் பெண் புதைக்கப்பட்ட மேடு மீதுதான்நேழுவீட்டு செட்டியார் குலமே கட்டப்பட்டுள்ளது .அந்தக் குற்றவுணர்வு தலைமுறைதலைமூறையாக கைமாறவும் படுகிறது .ஆனால் அடிப்படையில் அது ஆண்வழி அதிகாரக்குலம் .அதன் அடையாளம் உலகமே தனக்கானது என்று எண்ணும் கூனங்காணிப்பாட்டா .

ஆகவே நாகு அக்கா அவள் கணவனால் குழந்தைபெற முடியாதவள் என்று விலக்கப்பட்ட போது ,சர்வ சகஜமான அந்த செயலுக்கு எதிராக திரவி செயல்பட ஆரம்பித்தது ஒரு முக்கியமான புரட்சி .ஆஸ்பத்திரிக்கு கூட்டிக்கொண்டுபோய் அக்காவிடம் எந்தப் பிரச்சினையுமில்லை என்று அவன் நிரூபத்தது ஒருவகையில் அடுத்த காலகட்டத்தின் —அறிவியல் காலட்டத்தின்– வருகையின் குறியீடுமாகும் .அவள் கணவன் அவளை ஏற்கமறுத்தபோது அவளுக்கு மறுமணம் செய்விக்க அவன்முயன்றது கண்டிப்பாக ஒரு பெரும் புரட்சி நடவடிக்கையே . ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை .மொத்த நாவலும் தீவிரமான அவலத்தில் முடிகிறது . இந்த அவல முடிவு பெரிதும் விவாதிக்கப்பட்டது . அந்த வலம் சினிமாத்தனமாக இருப்பதாக முதிர்ச்சியில்லா விமரிசகர்கள் சொல்ல அழகியல் மொழி அறிந்தவர்கள் அம்முடிவு அதுவரை நாவலுக்கு இருந்துவந்த அப்பட்டமான நிதரிசனப்போக்குக்கு ஒத்து வராமையினால் சற்று நம்பகத்தன்மையை இழந்து விட்டிருக்கிறது என்றார்கள் . ஆனால் ந்தன் விடையை நாம் இலக்கிய வடிவில் மட்ட்மே தேடி விட முடியாது . தலைமுறைகள் ஒரு நீண்டன் வாய்மொழிமரபின் , ஐதீக மரபின் இன்றியமையாத தொடர்ச்சியாகும் .அம்மரபில்ஈருந்துவரும் அவல முடிவை அதுவும் தவிர்க்க முடியாது . அதாவது அந்த பவளம் கோர்க்கும் கதை நாவலின் தொடக்கத்தில் வந்ததுமே குறியீட்டு ரீதியாக நாவலை அது தீர்மானித்து விட்டது .அதை நீல பத்மனாபன் மீறிவிட முடியாது . சொந்த

வாழ்வில் அவர் அதை மீறி என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் கதை எப்போதுமே கதைமரபின் தர்க்கத்துக்கு உட்பட்டது .

‘தலைமுறை ‘களின் நடை பெரிதும் பாராட்டப்பட்டது.ஏற்கனவே சொல்லப்பட்டது போல அது மிக நிதரிசனமான நடை .அதில் சுவாரஸியப்படுத்தும் அம்சங்கள் ஏதும் இல்லை .அழகுகளே இல்லை .உண்மையிலேயே அத்தகைய ஒரு வாழ்க்கைச் சூழலுக்கு எவ்வளவு உத்வேகம் இருக்குமோ அவ்வளவு உத்வேகமே அதிலும் உள்ளது. பொதுவாக இக்கியப்படைப்புகளில் கதைமையம் அல்லது கதைசொல்லி அறிவாளியாகவோ ,மிகுந்த நுண்ணுணர்வுள்ளவனாகவோ காட்டப்படுவதே வழக்கம் . காரணாம் அவன் மூலம் ஆசிரியர் வெளிப்படுகிறார் என்பதே .ஆனால் திரவி மிகச்சாதாரணமானவனாகவே காட்டப்படுகிறான்.லெளகீகமான , நடுத்தர வற்கத்துகே உரிய எல்லா கோழைத்தனங்களும் தயக்கங்களுமுள்ள ஒருவன் . அவன் புரட்சியாளனோ கலகக் காரனோ அல்ல .அவன் சற்று படித்து அதன்

மூலம் நவீன காலகட்டத்துக்குள் வந்தது மட்டுமே அவனுக்கும் பிறருக்குமிடையேயான வித்தியாசம் .இதன் மூலம் நாவலின் ஒவ்வொரு வரியிலும் நம்பகத்தன்மைமிக்க எளிமை உருவாகிவந்தது . ‘ ‘சர்வ சாதாரணத்தின் கலை ‘ ‘ என்று தமிழில் எதையாவது சொல்லவேண்டுமென்றால் நீலபத்மநாபனின் இந்நாவலையே சொல்ல முடியும்.சாதாரணமான நடையின் சாதாரணத்தன்மையை மேலும் அதிகரிக்கும் முகமாக நீலபத்மநாபன் கதாபாத்திரங்களுக்கு மட்டுமல்லாமல் கதை சொல்லும் குரலுக்கும் வட்டார வழக்கை அளித்தார் .இது அக்காலகட்டத்தில் மிகவும் விவாதிக்கப்பட்டது .தூயதமிழ் வாதிகளின் எதிர்ப்பு நாவலுக்கு ஒரு எதிர்மறை விளம்பரமாகவும் அமைந்தது .

‘சர்வசாதாரணம் ‘ என்பதற்கும் ‘சர்வசாதாரணத்தின் கலை ‘ என்பதற்கும் ஏராளமான வேறுபாடு உண்டு . கலையின் சர்வசாதாரண இயல்பு ஒரு தோற்றமே . அது வாசக நம்பிக்கைக்காக உருவாக்கப்படும் ஒரு வெளிப்பாட்டு உத்தி மட்டுமே .கலை ஒரு போதும் சர்வசாதாரணமல்ல .சாதாரணமான நிகழ்வுகளின் பிரவாகமான வாழ்க்கை ஓட்டத்திலிருந்து சிலவற்றை பிரித்தெடுத்து முன்வைத்து ,அழுத்தம்தந்து ,உபரி அர்த்தம் அளித்து ,விளக்கி ,செறிவுபடுத்தி அதில் வாழ்க்கையின் ஒட்டுமொத்தம் சார்ந்த ஒரு பார்வையை அல்லது ஒரு அகத்தெளிவை குறிப்புணர்த்திக் காட்டுவதே இலக்கியக்கலையின் செயல்பாடாகும் .எல்லா கலையும் இவ்வியல்பினையே கொண்டிருக்கின்றன என்பார்கள் மொழியியல் பேராசிரியர்கள் .ஹால்லிடே முன்னிறுத்தல் [forefronting] என்று இதை விரிவாக விளக்குகிறார் . உதாரணமாக நித்ய சைதன்ய யதி ஒன்றை குறிப்பிடுவார் .வான்கா ஒரு ஏழை விவசாயியின் பழைய செருப்பை

வரைந்தார் .அது ஒரு வெறும் பொருள்தான்.ஆனால் அதை முன்னிலைப்படுத்தி விடுகிறார் .அவரது கலை என்பது அங்குதான் செயல்படுகிறது . அதன் பிறகு அந்த செருப்புகள் வெறும் பொருட்களல்ல ,குறியீடுகள் ஆகிவிடுகின்றன அவை .அவற்றுக்கு உள்ளர்த்தங்கள் உருவாகி விடுகின்றன.உண்மையில் ஒரு பழைய செருப்பு உருவாக்காத பலவகையான மன அதிர்வுகளை அவை நம்முள் உருவாக்குகின்றன .

அதாவது உத்தி என்று பார்த்தால் மிகைப்படுத்தல் சாதாரணமாக்கல் ஆகிய இரண்டுக்குமே ஒரே மதிப்புதான் .தன்னளவில் எதற்கும் மதிப்போ இழிவோ உருவாவது இல்லை .ஒப்பீடு சார்ந்து தற்காலிகமான மதிப்பீடுகள் உருவாகுமென்பது உண்மையே .அதாவது ஒரு சூழலில் எல்லா படைப்புகளுமே மிகையான கற்பனாவாதத் தன்மையுடன் இருக்கும்போது வரும் அப்பட்டமான யதார்த்தவாதப்படைப்பு அச்சூழலில் அதிர்ச்சியையும் அதன்மூலம் கவன ஈர்ப்பையும் அதன் அடுத்த கட்டமாக விமரிசன முக்கியத்துவத்தையும் பெறக்கூடும்.அதேபோலவே யதார்த்தவாத படைப்புகள் மலிந்த காலத்தில் வெளிவரும் அற்புத யதார்த்த படைப்புக்கும் அந்த முக்கியத்துவம் ஏற்படலாம் . ஆனால் படைப்பின் மொத்தமான முக்கியத்துவமென்ன

அதற்கு அவ்வுத்தி என்ன வகையில் பங்காற்றியுள்ளது என்பதே முக்கியமானது . தலைமுறைகளின் மேல்தளம் சாதாரணமானது என்றாலும் அதன் அடித்தளத்தில் நாம்வாழும் சமூகம் சார்ந்த சிக்கல்கள் சருமத்துக்கு அடியில் ரத்தக்குழாயின் பின்னல்கள் போல அடர்ந்துள்ளன. ஒரே ஒரு உதாரணம் சொல்லலாம்.திரவி தான் சார்ந்த ஏழுவீட்டு செட்டியார் சாதியை அதன் பழைமைப்போக்குகளில் இருந்து மீட்டு அடுத்த கட்டத்துக்கு கொண்டுசெல்ல முயல்பவன். அதேசமயம் அவன் தன்னை அறியாமலேயே பழைய காலத்துக்கான ஏக்கத்தையும் வெளிப்படுத்தியபடியே இருக்கிறான்.இந்தமுரண்பாடு எளிதில் விளக்கிவிடக் கூடியது அல்ல

திரவி இலட்சியவாதி அல்ல .தன் அக்காவை அவளது வாழ்க்கையின் துக்கத்திலிருந்து மீட்பதே அவனது இலக்கு .அவன் புதியகாலத்துக்கு போக முனைவது ஒரு சமூகஜீவியாக .அவனது மனம் இளமைப்பருவத்தை எண்ணி கடந்தகால வாழ்க்கைக்காக ஏங்குவது ஒரு தனிமனிதனாக . இத்தகைய ஆழமான அகமுரண்பாடுகள் நிரம்பிய ஒரு பரப்பாக உள்ளது தலைமுறைகளின் கதையோட்டம் .

‘தலைமுறை ‘களை மிக இளம்வயதில் படிக்கும்போது விசித்திரமான ஒரு பொறுமையின்மை ஏற்படும். திரவி என்ன செய்தும் ஒன்றுமே நிகழவில்லை .கூடிக்கூடிப் பேசுகிறார்கள்.மனக்கசப்புகளையும் நெகிழ்வுகளையும் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள் .உறவுச்சிக்கல்கள் அடர்ந்து விரிந்தபடியே செல்கின்றன . மிக எளிய விஷயம் ,ஆனால் அது

நடக்கவே இல்லை . ஒரு கட்டத்தில் தமிழக வாழ்க்கைச் சூழலை அறிந்தவர்களுக்கு நாகுவின் வாழ்க்கை முடிந்துவிட்டது என்ற உண்மை புலப்பட்டுவிடும்.அதன் பின்பும் பேச்சுகள் .அவள் தற்கொலை செய்து கொள்கிறாள்.குடும்பம் இரணியலைவிட்டு கிளம்புகிறது .நம் எளிய வாசக மனம் வேறு வகை முடிவுகளுக்காக துடிப்புகொள்வதும் ஆசிரியர் மீது மனக்கசப்பு கொள்வதும் இயல்பே . ஆனால் இம்முடிவே தமிழ் வாழ்க்கைச்சூழலில் பெருமளவு நடக்கக் கூடியது .மாறாக நடப்பது விதிவிலக்கே .'தலைமுறைகள்' அதன் யதார்த்த இயல்புப்படி விதியையே சார்ந்து இயங்க முடியும் .விதிவிலக்குகளை மையமாக்கும் படைப்புகள் கற்பனாவாதம் நோக்கி நகர்கின்றன.

'தலைமுறைகள் 'அவ்வகையில் ஒரு முன்னோடியாக அமைந்தது. நாம் முதலில் எழுதவேண்டியது கனவுகளையல்ல நிதரிசனத்தை என்று அது கற்பித்தது . எந்தக் கனவும் நிதரிசனம் சார்ந்து செயல்படும்போதே முக்கியத்துவம் பெறுகிறது என்று பொட்டில் அடித்தது போல சொல்லியது. இப்போது யோசிக்கும்போது வியப்பு ஏற்படுகிறது . அக்காலகட்டம் அரசியல் நோக்கோடு உற்பத்தி செய்யப்பட்ட வெற்றுக்கனவுகளும் ஆடம்பரச் சொற்களும் காற்றில் நிரம்பியருந்த காலகட்டம் . கற்பனாவதப்படைப்புகளை வாசகர்கள் ருசித்து விழுங்கிக் கொண்டிருந்த காலகட்டம் .அச்சூழலில் இருந்தபடி இத்தனை கறாரான யதார்த்த உலகை ஆக்குவதற்கு தன் கலையில் முழுக்க ஆழ்ந்து போகும் மனஒருமை கூடவேண்டும் . தன் கலைமீது ஆழமான நம்பிக்கை உருவாகவேண்டும் . மேலான கலைப்படைப்பு அதை சகஜமாக உருவாக்கிவிடும்போலும்.அந்த கலையம்சத்தால்தான் அது உருவான காலகட்டத்தின் எல்லா சூழல்சார்ந்த அர்த்தங்களும் அடிக்குறிப்புகளும் இல்லாமல்போன அடுத்த காலகட்டத்திலும் அதற்கடுத்த காலகட்டத்திலும் அந்நாவல் சட்டையுரித்து முன்னகரும் அரவம் போல புற அடையாளங்களையெல்லாம் கழட்டிப்போட்டு சென்றபடியெ இருக்கிறது போலும்.

[மூன்று]

நீல பத்மநாபனின் அடுத்த முக்கியப் படைப்பு 'பள்ள ிகொண்ட புரம்' . தமிழில் இதுவும் ஒரு முன்னோடி முக்கியத்துவம் உடையது.இதுவே தமிழில் எழுதப்பட்ட முதல் நனவோடை உத்தி[stream of conscious] நாவல் எனப்படுகிறது.திருவனந்தபுரம் நகரின் பின்னணியில் அனந்தன் நாயரின் வாழ்க்கையின் வீழ்ச்சியின் சோகமான சித்திரத்தை அளிக்கும் இந்நாவலே நீல பத்மநாபனின் சாதனை என்று சொல்லப்படுவதுண்டு.அதற்கு முக்கிய காரணம் 'தலைமுறைகள்' போல இந்நாவலில் விரிந்து செல்லும் வடிவம் இல்லாமல் கச்சிதமான வடிவம் உள்ளது என்பதே. பூஞ்சை உடலும் மெல்லிய மனமும் உள்ள குமாஸ்தா அனந்தன் நாயரின் பேரழகியான மனைவி கார்த்யாயினி விகரமன் தம்பி

என்ற அரசாங்க உயர் அதிகாரியால கைப்பற்றப்படுகிறாள் .அவாரால் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் குழந்தைகளை வளர்த்து ஆளாக்குகிறார் . வாழ்க்கையின் கடைசிக்கட்டத்தில் திருவனந்தபுரம் நகரில் நிலைகொள்ளாது அலையும் அனந்தன்நாயரின் ஒருநாள் நினைவுகள் மூலம் நாவல் சொல்லப்படுகிறது . காலம் கடந்துசென்றபோது தவறு சரிகள் எல்லாம் மழுங்கிப்போய்விடுகின்றன.அனந்தன்நாயரின் மகனுக்கு அம்மாவின் தற்போதைய செல்வாக்கு மூலம் சில லாபங்கள் அடையும் இலக்கு . பெண்ணுக்கு அப்பா மீது கரிசனம் . ஒழுக்கம் அறம் தியாகம் ஒன்றுக்கும் உறுதிப்பாடு ஏதுமில்லை என்ற உணர்வை அடைந்த நாயர் தன் மன ஆவேசத்தை வெளிப்படுத்தி முடிக்கிறார் .

எழுபது எண்பதுகளின் வடிவபோதத்தை இந்நாவலின் சுருக்கமான கச்சிதவடிவம் பெருமளவுக்கு திருப்திப்படுத்தியது . அனந்தன் நாயரின் வாழ்க்கை அவரது சிதறிய நினைவுகள் மூலம் துளிதுளியாக சொல்லப்படுவது வாசகனுக்கு பல ஊக இடைவெளிகளை உருவாக்குகிறது . ஆனால் அக்கால கட்ட விமரிசகர்கள் சிலர் இக்கதையை நேரடியாகவே சொல்லியிருக்கலாம் என்று இப்படைப்பு குறித்து கருத்து சொன்னதுண்டு.[கோ . ராஜாராம் ,கணையாழி] .ஆனால் இன்றைய வாசிப்புக்கு இவ்வடிவமே இப்படைப்புக்கு உரிய இயல்பான வடிவம் என்று படுகிறது . இந்நாவலை நேரடியான சித்தரிப்பாக எழுதியிருப்பின் இப்பிரச்சினையின் விரிவான சமூக அரசியல் பின்னணிக்குள் போகவேண்டியிருக்கும். கேரளச் சூழலில் ஒற்றைமணமுறை நடைமுறைக்கு வர ஆரம்பித்த காலகட்டத்தில் நடக்கும் நாவல் இது .ஜனநாயக முறை உருவாகாத ,மன்னராட்சிக்கால அரசியல் பின்னணி அப்போது இருந்தது . கார்த்யாயினி விக்ரமன் தம்பியுடன் போனதை அப்பின்னணியில் வைத்தே விரிவாக பேச முடியும் ஆசிரியரின் இலக்கு அதுவல்ல.அது முழுக்க அனந்தன் நாயரிலேயே குவிகிறது . இன்னும் சொல்லப்போனால் அனந்தன்நாயரில் கூட அல்ல .அவரது ‘சாமன்யத்தனத்தில் ‘ மட்டும்தான் .அதற்குரிய வடிவையே ஆசிரியர் தேர்வு செய்கிறார் .அது கூட தவறுதான் .நீலபத்மநாபனுக்கு இலக்கியத்தில் வடிவதேர்வு ஏதும் இல்லை .அவர் பெரும்பாலும் அகமன இயக்கத்தை [அதை அவர் கடவுள் என்றே சொல்கிறார்] நம்பி எழுதும் படைப்பாளி.

ஆனந்தன் நாயரின் அந்த ஒரு நாள் வாசகனுக்கு முன்னரே தெரியாதென்றாலும் அனந்தன் நாயருக்கு ஏதோ ஓர் உள்ளுணர்வால் தெரிந்தபடி ஒரு முக்கியமான நாள். ஆகவே தான் அன்று முழுக்க அவர் ஒரு நெகிழ்ந்த மனநிலையில் , உத்வேகம் ஓயாத எண்ண பாய்ச்சலுடன் இருக்கிறார் . அந்த ஒருநாள் தேர்வு செய்யப்பட்டுள்ளதே அதற்குத்தான் . நீண்ட வாழ்க்கை முழுக்க அம்மாதிரி உக்கிர உணர்வுகளுடன் அவர் இருந்திருக்க நியாயமில்லை . அவளை மறந்த நாளும் அவளை மன்னித்த நாளும் எல்லாம் இருந்திருக்கும் . அதாவது அக்கதையை உக்கிரம் குறையாமல் சொல்ல அந்த நாளே உகந்தது .அந்த நாளில் தான் அவரது

ஆழ்மனம் நிலப்பரப்பை மீறி வெளியே வந்து வழிகிறது .இந்த அம்சத்தை அன்றைய முக்கிய விமரிசகர்கள் எவருமே கவனித்ததாக தெரியவில்லை . 'பள்ளிகொண்ட புரத்தின் 'மிக முக்கியமான அம்சம் அதில் அந்நகரம் வெறும் பௌதீக பின்னணியாக வரவில்லை என்பதே .அது அனந்தன் நாயரின் மனமேதான்.அதன் ஒவ்வொரு இடமும் , ஒவ்வொரு பொருளும் அவரது மனத்தின் ஒருபகுதியின் குறியீடாகும். எந்த இடம் அல்லது பொருள் அவரில் எந்த நினைவை உருவாக்குகிறது என்ற கவனம் வாசகனுக்கு இருக்குமென்றால் இந்நாவலை மிக விரிவாக அவன் வாசித்து விரிவுபடுத்திக் கொள்ள முடியும். துரதிருஷ்டவசமாக தமிழில் அன்று பிரபலமாக இருந்தது ஒன்று ' கச்சிதவடிவத்து 'க்கான தேடல் .மறுபக்கம் சமுக்க அரசியல் கோட்பாடுகளுக்கான தேடல். ஆகவே அத்தகைஉய ஒரு கூர்ந்த வாசிப்பு அந்நாவலுக்கு கிடைக்காமலே போயிற்று . அத்தகைய வாசிப்பை கேரள விமரிசகரும் கவிஞருமான என் வி கிருஷ்ண வாரியர்தான் நிகழ்த்தியுள்ளார் . அதைப்போல அனந்தன் நாயரின் மனத்தில் ஒரு நினைவு எப்படி இன்னொரு நினைவை இழுத்து வருகிறது என்ற சூட்சுமமும் வாசகக் கவனத்துக்கு உரியது .

' பள்ளி கொண்டபுரம் ' அதன் எளிமையான நேரடிமொழியை மீறிய பலவகையான உளவியல் சிக்கல்கள் கொண்டது .அனந்தன் நாயரின் மனநிலை குரூரத்திலிருந்து சுயவதைக்கும் மாறி மாறி ஊசலாடுவதை அந்நாவலில் கவனிப்பது மிக முக்கியமான இலக்கிய அனுபவம் .என் கேரள நண்பர் சொன்னார் தன்னை வதைக்கப்பட்டவனாகவும் அநீ ீதி இழைக்கப்பட்டவனாகவும் ,அதை மீறி நன்மை செய்யும் தியாகியாகவும் சித்தரித்துக் கொள்வது அனந்தன் நாயருக்கு ஆழமான சுயதிருப்தியையும் வாழ்க்கைக்கு அர்த்தத்தையும் அளிக்கிறது .ஆகவே அவர்தான் தன் மறைமுகமான குரூரம் மூலம் அவளை துரத்துகிறார் .கார்த்யாயினியின் அழகு அனந்தன் நாயருக்கு அளித்த தாழ்வுணர்வு அதற்கு காரண என்று கருதலாம் . ஒரு சமான்யன் தன்னை சாமான்யன் மட்டுமே என அனுதினமும் அறியும்போது ஏற்படும் சுயவெறுப்பும் அதை வெல்ல உருவாக்கிக் கொள்ளும் முடிவற்ற மனநாடகங்களும் இத்தனை கூர்மையாக வெளிப்பட்ட நாவல்கள் அபூர்வமாகவேரிருக்க முடியும். அவ்வகையில் எக்காலத்துக்கும் உரிய படைப்பு இது.

[நான்கு]

நீல பத்மனாபனின் 'உறவுகள் ' அவரது முக்கிய நாவல்களில் ஒன்று. முந்தைய நாவல்களைப்போலஆதிகமாக இது கவனிக்கப்படவில்லை .மறுபதிப்புகளும் வரவில்லை .மரணப்படுக்கையில் கிடக்கும் அப்பாவை சுற்றி வந்து நகரும் மகனின் நினைவுகள் வழியாக சொல்லப்படும் இந்நாவல் தமிழ்க மனத்திலுள்ள உறவு வலையின் ஒரு முக்கியமான சித்திரம் என்று சொல்லலாம் . இதுவெளிவந்த போது இதில் ஃப்ராய்டிய சிதனையை தேடியவர்கள் உண்டு. அப்போது இருத்தலியம் பிரபலமாக

இருந்தது . இரு மனிதர்களுக்கிடையேயான உறவு மோதலால் உருப்பெறுவது என்பது ஒரு சூத்திரமாக பயிலப்பட்ட காலம்ஹுறவுகளில் அப்பா மகன் மோதல் இல்லை . அப்பாவுக்காக உருகி நினைவுகளில் அலைந்து அவரது தொடர்ச்சியாக தன்னை கண்டடையும் ராஜகோபாலின் கதை இது . பரமேஸ்வர பிள்ளையும் அதற்கேற்ப குழந்தைகளுக்காக தன்னையே பலியிடும் குணச்சித்திரமாகவே படைக்கப்பட்டுள்ளார் . இந்நாவலில் இந்த்தலியத்தையும் ஃப்ராய்டியத்தையும் தேடியவர்களில் நானும் ஒருவன் .ஆனால் என்மப்பா இறந்த போது என் சொந்த அனுபவங்கள் ஃப்ராய்டியத்தாலோ இருத்தலியத்தாலோ விளக்கக் கூடியதாக இருக்கவில்லை .இந்நாவல் அந்த மன இயக்கத்தின் ஒவ்வொருதுளியுடனும் ஒத்துப்போவதை அப்போதுதான் கண்டேன். அது குறித்து நீல பத்மநாபனுக்கு எழுதவும் செய்தேன். உண்மையில் என் இலக்கிய வாழ்வில் அது ஒரு கண்திறப்பு .நமது படிப்பையோ ,புத்திசாலித்தனத்தையோ அல்ல நமது சொந்த வாழ்வனுபவத்தையே இலக்கியப்படைப்பு மீது நாம் பிரயோகித்துப்பார்க்கவேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது .

இந்திய சூழலில் மகனின் பிரச்சினை அப்பாவை எப்படி சுவீகரித்துக் கொள்வது எப்படி , அவரது தொடர்ச்சியாக இருக்கும் அதே சமயம் தன் தனித்தன்மையையும் தக்க வைத்துக் கொள்வது எப்படி என்பதே . இந்திய அப்பாக்கள் தியாகத்தால் தான் மகனுடன் உறவை நீட்டிக்கிறார்கள். விதிவிலக்குகளைதவிர்த்தால் இதுவே இங்குள்ள பொது மரபு . மோதல் கண்டிப்பாக உண்டு ,ஆனால் அதைவிட முக்கியமானது மகனில் எஞ்சும் நன்றி /குற்ற உணர்வுதான் . ஆகவே அவரை எதிர்கொள்வது சிரமமாக இருக்கும்போது அவரை இம்மிகூட புறக்கணிக்கவும் முடியவில்லை .அதைவிட முக்கியமான விஷயம் அவர் மூலமே அத்தனை சமூகத் தொடர்பும் அவனுக்கு இருக்கிறது என்பதே.இன்னார் பிள்ளை என்றே அவன்ஆடையாளப்படுத்தப்படுவான் . அத்தனை உறவுகளும் அவனுக்கு அப்பா மூலம் வந்து சேர்வதே . இளமையில் அவன் உறவுகளை உதாசீனம் செய்யலாம் ,முதுமை நெருங்க நெருங்க அது முடியாது .அப்போது அவன் மேலும் மேலும் தன் தந்தையை நெருங்கி வருவான் .மெல்ல உருமாறி தன் தந்தையே ஆகிவிடுவான்.

ராஜகோபாலின் பிரச்சினையும் இதுதான் . அப்பாவுக்கு உடல் நலமில்லை என்ற செய்தி வந்தபோது உடனே ராஜ சேகரன் மனத்தில் எழுந்த முதல் எண்ணம் செலவுக்கணக்குதான். ஆனால் குற்ற உணர்வும் பழைய நினைவுகளும் கலந்த மனநெகிழ்வு , லௌகீக அலைச்சல் முதலியவை வழியாக 18 நாள் அப்பாவின் மரணப்படுக்கை அருகே இருந்த அவன் இறுதியில் அவரை கடவுளாக்கி நிம்மதி அடைந்து விடுகிறான். கூர்ந்த வாசிப்பு அளிக்கப்படாத இந்நாவலும் தவறாகவே

புரிந்துகொள்ளப்பட்டது . மிக அபத்தமான இருத்தலிய வாசிப்பை இதற்கு அளித்த சுந்தர ராமசாமி இந்த புறக்கணிப்புக்கு முக்கிய காரணமானார் என்றால் அது மிகையல்ல . ராஜகோபால் தன் தந்தையுடனான உறவில் ஏன் மோதலே இல்லாமல் ஒத்திசைவும் மனநெகிழ்வும் மட்டுமே உள்ளவனாக இருக்கிறான் என்றார் ராமசாமி .எந்த மகனும் அப்பா மீது மனக்குறைகள் இல்லாமல் இப்படி முழுமையான மனக்கசிவுடன் இருக்கமாட்டான் ,இது செயற்கையானது என்றார் .[இப்போது யோசிக்கும்போது தனிப்பட்ட முறையில் மிக வருத்தம் தரும் ஒரு விஷயம் தோன்றுகிறது.இதை ஒரு எளிய அக்கப்போராக எவரும் காணலாகாது .நீல பத்மநாபன் படைப்புகளை பற்றி மிக எதிர்மறையான விமரிசனங்களை மிக விரிவான நேர் பேச்சுகளிலும் உரைகளிலும் முன்வைத்து அவர் மீதான விமரிசனக் கணிப்புகளை உருவாக்கக் காரணமாக இருந்த சுந்தர ராமசாமி எங்குமே அந்தக் கருத்துக்களை கறாராக பதிவு செய்து விவாதத்துக்கு வரவேயில்லை. இது ஒரு படைப்பாளிக்கு இழைக்கப்படும் முக்கியமான அநீதியாகும்.சுந்தரராமசாமி மீதான விமரிசனங்களை சம்பந்தப்பட்டவர்கள் தொடர்ந்துமுன்வைத்து வந்தனர் . அது அவருக்கு முக்கியத்துவத்தையும் உருவாக்கியது.அம்மாதிரி முக்கியத்துவம் பிறருக்கு உருவாகலாகாது என்பதில் அவர் சிறப்பான கவனம் செலுத்தினார் என்றே கொள்ளவேண்டியுள்ளது . இதை தி .ஜானகிராமனுக்கும் ப . சிங்காரத்துக்கும் ,ஆ.மாதவனுக்கும் எல்லாம் அவர் செய்தார் . இதில் அறியாமல் பங்கு பெற்ற குற்ற உணர்வு எனக்கு உண்டு .]

ராஜகோபாலின் அந்த 18 நாள் மனநெகிழ்வு ஒரு ஆழமான சுயபாவனையே என்பது நாவலிலேயே தெளிவாக உள்ளது .படிப்படியாக அவன் அம்மனநிலையை வளர்த்து எடுக்கிறான். அவர் உடல்நலமில்லை என்று சொன்னபோது அதை கவனிக்காதபாவனையில் போனவன்தான் அவன். இந்த பாவனை ஆழ்மனம் போடும் ஒரு நுட்பமான வேடம் .ராஜகோபாலுக்கே அது தெரியாது .மிக சீக்கிரத்திலேயே அவன் அவரை ஒரு படமாக்கி பூபோட்டு வணங்க ஆரம்பித்து தன் அன்றாட வாழ்க்கையிலிருந்து வெளியேற்றிவிடுவான்.அவர் விட்டுசென்ற உறவுகளில் மரபுகளில் எவை அவனுக்கு வசதியானவையோ அவற்றை மட்டும் அவன் பேணுவான் . அதாவது அவனுக்கும் அவன் தந்தைக்குமான மோதலின் ஒரு சமமான மறுதட்டுதான் இந்த நெகிழ்வு.ராஜகோபாலை பொறுத்தவரை தந்தை தரும் குற்ற உணர்வையும் அவர் வழியாக வரும் உறவின் வலையையும் எப்படி கையாள்வது என்பதே பிரச்சினை . ராஜகோபாலின் நெகிழ்ச்சியை , அதனூடாக ஓடும் சுயபாவனைகளை ,உறவுகளில் அவனது சுயநலப்பார்வையை கூர்மையாக நீலபத்ம நாபன் சுட்டி காட்டுகிறார்.நகுலன் ‘தமிழ் நாவல்களில் இந்த அளவுக்கு எந்தக் கதாபாத்திரமும் தோலுரிக்கப்பட்டதில்லை ,அதன் வேஷம்

கலைக்கப்பட்டதில்லை ' ' என்று குறிப்பிட்டார் . அவ்வகையில் தமிழின் முக்கியமான படைப்புகளில் ஒன்று இந்நாவல் .

[ஐந்து]

நீல பத்மநாபன் நாவல்களின் சிறப்பம்சம் அவை அறிவுபூர்வமானவை அல்ல என்பதே.அவருக்கு நுட்பங்கள் தன் படைப்புகளில் கூடியிருக்கும் விஷயமே தெரியாது.தன் எழுத்தில் மிதமிஞ்சிய உணர்ச்சியுடன் ஈடுபடுவதை மட்டுமே அவர் செய்து வருகிறார் . பழுத்த லெளகீக வாதியின் பார்வை அவருடையது. ஆன்மீக விஷயங்களை அவர் எழுதும்போதுகூட அந்த லெளகீக பார்வையே மேலொங்கியுள்ளது . மனமயக்கங்கள் இல்லை. அக , புற ஆராய்ச்சிகளும் இல்லை.கூடுமானவரை 'அப்படியே ' சொல்ல முயல்கிறார். அவர் பிற கதாபாத்திரங்களை பொதுவாக அந்த அளவுக்கு கூர்ந்து கவனிப்பதில்லை.ஆனால் அவர் தன்னை[தன்னை போன்று வரும் மையக் கதாபாத்திரத்தை]மிக ஆழமாகக் கவனிக்கிறார் . தோலுரிக்கிறார் .தன் விஷயத்தில் இந்த அளவுக்கு ஈவிரக்கமற்று செயல்பட்ட தமிழ் எழுத்தாளர் இல்லை .விளைவாக பல முதல்கட்ட வாசகர்கள் நீலபத்மநாபனே ஒரு சுயநலவாதி , அற்பத்தனமானவர் தான் என்ற மனச்சித்திரத்தைக்க்கூட அடைந்துள்ளனர் . இந்த மூர்க்கமான சுயாறுவை சிகிழ்ச்சைமூலம் அவர் நாவல்களில் மிக ஆழமான ஒரு உளவியல் வெளிப்பாட்டுக்களம் உருவாகிவருகிறது .அவரது எல்லா நாவல்களையும் அவை ஒருவகை உளவியல் ஆவணங்கள் என்ற அடிப்படையில் நாம் மிக கூர்ந்து வாசிக்கவேண்டியுள்ளது.

மின் உலகம் ஃபைல்கள் போன்ற நாவல்களில் அவரது அலுவலக சூழல் குறித்து நுட்பமான அவதானிப்புகளை நீல பத்மநாபன் முன்வைத்துள்ளார். ஆயினும் அவை முக்கிய படைப்புகளாக ஆகாமல் போனதற்கு பல காரணங்கள் உண்டு . லெளகீக நுட்பம் நிரம்பிய அப்பார்வை அந்நாவல்களில் வாழ்க்கையின் அடிப்படை வினாக்கள் நோக்கி நகரவில்லை என்பதே. அவரது பிற்கால நாவல்கள் எவையுமே ஆழமான மனநகர்வினை அளிப்பவையாக இல்லை.அதற்கு காரணம் அவை மேலோட்டமான சுய விசாரணக்ளாக நின்றுவிட்டன என்பதும் அவற்றி சாராம்சம் நோக்கி நீலபத்மநாபனின் பார்வை விரியவில்லைஎன்பதும் தான் .குறிப்பாக தேரோடும்வீதி என்ற ப்ரும் நாவல் சமகால இலக்கிஅய் சூழல் குறித்த அவரது குற்றம்சாட்டல்களாகவே நின்றுவிட்டது .

நீலபத்மநாபனுக்கு தமிழ்ச் சிறுகதை மரபில் இடமில்லை.அவர் அடிப்படையில் நாவலாசிரியர்.

சிறுகதையின் கச்சிதமும் கூர்மையும் கவித்துவமும் குறிப்பமைதியும் பெரும்பாலான நீல பத்மநாபன் கதைகளில் கைகூடவில்லை .வெறும்

அனுபவ விவரணைகளாகவே அவை நின்று விடுகின்றன. கவிதைகளும் அப்படியே.கவிதைகளில் நீலபத்மநாபன் உணர்ச்சிப்பீரிடலாக புலம்புகிறார் . ,

நீல பத்மநாபன் யதார்த்த [நாச்சுரலிச]எழுத்தின் காலத்தை சேர்ந்தவர் . ஆகவே அவரது எழுத்தில் தத்துவார்த்த பார்வையும் , செதுக்கப்பட்ட கச்சித வடிவமும் இல்லை. மனம் ஆசிரியரால் ஆய்வு செய்யப்பட்ட வடிவில் வெளிவருவது இல்லை .மாறாக அது ஒரு வகை தன்னிச்சையான வெளிப்பாடு போல நேரடியாக சொல்லப்படிகிறது .நீலபத்மநாபனின் மொழிநடையில் செயற்கையான சொல்லாட்சிகள் ,பொருத்தமற்ற வருணனைகள் உண்டு . புதிய வாசகர்களுக்கு அவரது நடை அவரை ஒரு முதிர்ச்சியற்ற படைப்பாளி என்ற எண்ணத்தை ஏற்படுத்தக் கூடும் . அவரது நாவல்களில் ஒரு நிகழ்ச்சி எந்த அளவுக்கு ஆழ்மனத்தின் நுட்பமான வெளிப்பாடாக உள்ளதோ அந்த அளவுக்கு அவற்றின் சித்தரிப்பும் மொழியும் தட்டையாக இருக்கும். அதாவது கற்பனையற்ற ஒரு சாதாரண மனிதன் நம்மிடம் தன் வாழ்க்கையைப்பற்றி பேசுவதுபொால அவை இருக்கும் .அக்காரணத்தாலெயே அவற்றை நாம் தவறவிட்டுவிட வாய்ப்புண்டு

நீலபத்மநாபனை அளவிட நமக்கு இருக்கவேண்டிய அளவுகோல் அவரது காலத்துக்கும் நமக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். இயல்புவாத எழுத்துக்கும் பின்நவீனகால வடிவங்களுக்கும் ஒரே சமயம் பொருந்துவதாக இருக்கவேண்டும் . அப்படியானால் அது வடிவம் சார்ந்ததாக இருக்க முடியாது . இலக்கியவாசிப்புக்கு எப்போதும் அடிப்படையாக அமையும் வாழ்க்கை சார்ந்ததாகவே இருக்க முடியும் .மிக தோராயமாகவே அந்த அளவுகோலைப்பற்றி நாம் பேச முடியும்.இப்படி சொல்லலாம். ஒரு இலக்கியப்படைப்பு வாழ்க்கையின் ஏதாவது ஒரு தளத்தை வாழ்ந்து பெற்ற அனுபவத்துக்கு சமானமாக நமக்கு விளக்கிக் காட்டுகிறது .வாழ்க்கையின் சாராம்சம் சார்ந்த ஒரு மனநகர்வினை நமகு அளிக்கிறது நீல பத்மநாபனின் நாவல்கள் அந்த அர்த்தத்தில் தமிழின் மிக முக்கியமான கலைப்படைப்புகளேயேகும்.

அழகியல், உலகப்பார்வை



தமிழன்னை விருது, 1988

நீல பத்மநாபன் பெரும்பாலும் தன் சொந்தவாழ்க்கையின் அணுக்கமான சாயல் கொண்ட படைப்புகளை எழுதுபவர். பெரும்பாலான கதைகள் அவர் பிறந்த இரணியல், அவர் வாழும் திருவனந்தபுரம் ஆகிய ஊர்களைக் களமாகக் கொண்டவை. அவருடைய குடும்பப்பின்புலம், அவருடைய அலுவலகச்சூழல் ஆகியவற்றை ஒட்டிய புனைவுகளாக தலைமுறைகள், உறவுகள் , மின்னுலகம் ஆகிய நாவல்கள் அமைந்துள்ளன.

நீல பத்மநாபனின் நாவல்களின் பொதுவான அமைப்பு ஒரு கதாபாத்திரத்தின் புறவுலகையும் அகவுலகையும் அந்த கதாபாத்திரத்தின் பார்வையிலேயே விவரிப்பது. உணர்ச்சிகளும் அவ்வாறே விவரிக்கப்படுகின்றன. நடுத்தரவர்க்க அன்றாட வாழ்க்கையை நடுத்தரவர்க்க எளியமனிதர்களின் பார்வையிலேயே அவர் எழுதியிருக்கிறார். நனவோடை உத்தியை பள்ளிகொண்டபுரம், உறவுகள் போன்ற நாவல்களில் பயன்படுத்தியிருக்கிறார்.

நீல பத்மநாபனின் தலைமுறைகள் நாவலில் கதைசொல்லவும் பேச்சுமொழிக்கு அணுக்கமான நடையை பயன்படுத்தியிருக்கிறார். இது க.நா.சுப்ரமணியம் போன்ற விமர்சகர்களால் பாராட்டப்பட்டது, மரபான வாசகர்களால் எதிர்க்கப்பட்டது. "நீல பத்மநபனின் தலைமுறைகள் தமிழ் உரைநடைப்போக்கில் முக்கியமானதோர் திருப்புமுனையாகும்.பேச்சுத்தமிழ் இலக்கியப் படைப்புக்குரியதே என்று செயல்முறையில் செய்துகாட்டிய சாதனை நீலபத்மநாபனுடையது. இதை ஆங்கில மொழியில் ஜேம்ஸ் ஜாய்ஸ் யுலிஸஸ் நாவல் மூலம் செய்துகாட்டிய சாதனையுடன் ஒப்பிடலாம் என்று *அசோகமித்திரன்* குறிப்பிடுகிறார் *[கால ஓட்டமும் தமிழ்நடையும். கல்கத்தா தமிழ் மன்ற வெள்ளிவிழா மலர்]*

நீல பத்மநாபன் கவிதைகள் நேரடியான உணர்ச்சிப்பெருக்குகளாக அமைபவை.யாப்பில்லாமல் ஓசையொழுங்குடன் அமைந்த அக்கவிதைகளில் ஐயப்பப் பணிக்கர் போன்றவர்கள் எழுதிய யாப்பற்ற ஆனால் இசையமைதி கொண்ட மலையாளக் கவிதைகளின் அழகியல் செல்வாக்கு உண்டு.

இருத்தலியல், மார்க்ஸியம் போன்ற கொள்கைகளின் செல்வாக்கு நீல பத்மநாபனில் இல்லை. ஆனால் அவருடைய எஞ்சீனியர், மின்உலகம் போன்ற நாவல்களில் உழைப்பாளிகள் மீதான சுரண்டலின் சித்திரங்கள் உள்ளன என்று நா.வானமாமலை குறிப்பிடுகிறார். (நீலபத்மநாபன் படைப்புலகம் பாரதி நேஷனல் ஃபாரம்) பள்ளிகொண்டபுரம், உறவுகள் ஆகிய நாவல்களில் இருத்தலியல் சிக்கல்கள் பேசப்படுகின்றன என்று விமர்சகர்கள் சுட்டிக்காட்டியதுண்டு.

பொதுவாக உறவுகளிலும், அரசு குடும்பம் போன்ற அமைப்புக்களிலும் சிக்கி சிதைவுறும் எளிய மனிதர்களின் வாழ்க்கையை நீல பத்மநாபன் எழுதினார்.



நீல பத்மநாபன்

அமைப்புச் செயல்பாடுகள்

நீல பத்மநாபன் திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கத்துடன் தொடர்புகொண்டு இலக்கியச் செயல்பாடுகளை ஒருங்கிணைத்திருக்கிறார். சிறுகதைகளுக்காக 'நீலபத்மம்' என்னும் இலக்கிய விருது திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம் சார்பில் வழங்கப்படுகிறது. கவிதைகளுக்காக தலைமுறைகள் விருது வழங்கப்படுகிறது. அவருடைய பிறந்தநாளான ஏப்ரல் 26 அன்று இவ்விருது அளிக்கப்படுகிறது.

நூல்கள்

நீல பத்மநாபன் தமிழிலும் மலையாளத்திலும் எழுதி வருகிறார்.

தமிழ்நூல்கள்

- தலைமுறைகள் - ஜெயக்குமாரி ஸ்டோர் வெளியீடு, நாகர்கோவில், 1968
- பள்ளிகொண்டபுரம் - வாசகர் வட்டம், 1970
- பைல்கள் - ஜெயக்குமாரி ஸ்டோர் வெளியீடு, நாகர்கோவில், 1973
- உறவுகள் - ஜெயக்குமாரி ஸ்டோர் வெளியீடு, நாகர்கோவில், 1975
- மின் உலகம் - 1976
- நேற்று வந்தவன் - 1978
- உதய தாரகை - 1980
- வட்டத்தின் வெளியே - 1980
- பகவதி கோயில் தெரு - 1981
- போதையில் கரைந்தவர்கள் - 1985
- தீ தீ - 1987
- முறிவுகள் - 1987
- தேரோடும் வீதி (தன்வரலாற்றுப் புதினம்) - 1987

சிறுகதைத் தொகுதிகள்

- மோகம் முப்பது ஆண்டு (11 சிறுகதைகள்) , 1969
- சண்டையும் சமாதானமும் (11 சிறுகதைகள்) , 1972
- மூன்றாவது நாள் (11 சிறுகதைகள்) , 1974
- இரண்டாவது முகம் (19 சிறுகதைகள்) , 1978
- நாகம்மாவா? (15 சிறுகதைகள்) , முத்துப்பதிப்பகம், மதுரை , 1978
- சிறகடிகள் (13 சிறுகதைகள்) , 1978
- சத்தியத்தின் சந்நிதியில் (15 சிறுகதைகள்) , 1985
- வான வீதியில் (18 சிறுகதைகள்) , 1988
- அவரவர் அந்தரங்கம் (11 சிறுகதைகள்) , 1998
- பிறவிப் பெருங்கடல் (, 2008

- கொட்டாரம் (என்னைப்போல் இருவர், ரௌத்திரம், நொண்டிப் புறா, பூஜை அறை, பகை, கொட்டாரம்) , வானதி பதிப்பகம், சென்னை , 2012

கவிதைத் தொகுதிகள்

- நீல பத்மநாபன் கவிதைகள், எழுத்து பதிப்பகம் சென்னை, 1975
- நா காக்க, 1984
- பெயரிலென்ன, 1993

2003-ம் ஆண்டு வரை இவரால் எழுதப்பட்ட கவிதைகள் அடங்கிய தொகுப்பு நீல பத்மநாபனின் 148 கவிதைகள் என்னும் தலைப்பில் 2003-ம் ஆண்டில் வெளிவந்தது.

கட்டுரைத் தொகுதிகள்

- சிதறிய சிந்தனைகள் (17 கட்டுரைகள்), அகரம், சிவகங்கை, 1978
- இலக்கியப் பார்வைகள் (13 கட்டுரைகள்), அமிழ்தம் பதிப்பகம், வேலூர், 1988
- சமூகச் சிந்தனை (18 கட்டுரைகள்), அமிழ்தம் பதிப்பகம், வேலூர், 1991
- யாரிடமும் பகையின்றி (21 கட்டுரைகள்), அமிழ்தம் பதிப்பகம், வேலூர், 1993
- வாழ்வும் இலக்கியமும் (14 கட்டுரைகள்), அமிழ்தம் பதிப்பகம், வேலூர், 1997
- நவீன இலக்கியம் - சில சிந்தனைகள் (18 கட்டுரைகள்), அமிழ்தம் பதிப்பகம், வேலூர், 2001
- இன்றைய இலக்கியச் செல்நெறிகள் (30 கட்டுரைகள்), இராசராசன் பதிப்பகம், சென்னை 17, 2003
- ஐயப்ப பணிக்கரின் ஆளுமையும் சில படைப்பு மாதிரிகளும், விருட்சம், சென்னை, 2006
- உணர்வுகள் சிந்தனைகள் (137 கட்டுரைகள்), நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2008
- பார்வைகள் மறுபார்வைகள், 2010

2005-ம் ஆண்டு வரை இவர் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் அடங்கிய தொகுப்பு நீல பத்மநாபனின் கட்டுரைகள் என்னும் தலைப்பில் 2005-ம் ஆண்டில் வெளிவந்தது.

நாடகத்தொகுதி

- தனிமரம் - 2009

திரட்டுநூல்

- குருக்ஷேத்திரம் - 1976

மொழிபெயர்த்துத் தொகுத்தவை

- தற்கால மலையாள இலக்கியம் - 1985, நர்மதா பதிப்பகம், சென்னை
- மதிலுகள் - நவீன மலையாள இலக்கியம் - 2000, காவ்யா, சென்னை
- ஐயப்பப் பணிக்கரின் கவிதைகள் - 1999
- ஐயப்பப் பணிக்கரின் கோத்ர யானம் - 2002

மலையாளப்படைப்புக்கள்

நாவல்கள்

- பந்தங்கள் - 1979
- மின் உலகம் - 1980
- தலைமுறைகள் - 1981
- பள்ளிகொண்டபுரம் - 1982
- தீ தீ - டி.சி. புக்ஸ், கோட்டயம், 1990

சிறுகதைகள்

- கதைகள் இருபது (20 கதைகள்), கரண்ட் புக்ஸ் கோட்டயம், 1980
- எறும்புகள் (20 கதைகள்), கரண்ட் புக்ஸ் கோட்டயம், 1987
- அர்கண்ட் கோனில் (20 கதைகள்), கரண்ட் புக்ஸ் கோட்டயம், 1997


- வேறத்தவர் (23 கதைகள்), கரண்ட் புக்ஸ் கோட்டயம், 2003

கவிதைகள்

- நீல. பத்மநாபன்ட கவிதைகள் - விஸ்வம் புக்ஸ், திருவனந்தபுரம், 2003

கட்டுரைகள்

- சிருஷ்டியிலே நொம்பரங்கள் - கரண்ட் புக்ஸ், கோட்டயம், 2006



ஆங்கில மொழியாக்கங்கள்

- Generations - Tr Ka. Naa. Subramaniam
- Where the Lord Sleeps - Tr. M Dakshinamurthy.
- SURRENDER AND OTHER POEMS - 1982
- POEMS BY NEELA PADMANABHAN - 2005
- THE INCARNATION (20 Short Stories) - 1987
- RELATIONS (novel) - 2003


- Birds in the Cage (novel) - Tr. M. Vijayalaxmi Qureshi
- Neela Padmanabhan - A Reader (An anthology of complete works), Ed. By Prema Nandakumar, Sahitya Akademi, New Delhi (in print)

நீல பத்மநாபனின் படைப்புகள் பற்றிய திறனாய்வுகள்

- நீல பத்மநாபனின் இலக்கியத்தடம் - 1999
- நீல பத்மநாபன் படைப்புலகம் - 2001
- Neela Padmanabhan - A Reader(An anthology of complete works), Ed. By Prema Nandakumar, Sahitya Akademi, New Delhi

தலைமுறைகள்

https://tamil.wiki/wiki/%E0%AE%A4%E0%AE%B2%E0%AF%88%E0%AE%AE%E0%AF%81%E0%AE%B1%E0%AF%88%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D



தலைமுறைகள் (1968) நீல பத்மநாபன் எழுதிய நாவல். தமிழில் முழுக்கமுழுக்க வட்டார மொழியையே கதைசொல்லும் மொழியாகவும் கொண்டு எழுதப்பட்ட முதல்நாவல். குமரிமாவட்டம் இரணியல் பின்னணியில் இரணியல்செட்டிமார் அல்லது ஏழூர்செட்டிமார் என்னும் சாதியின் பின்புலத்தில் துல்லியமான நுண்செய்திகளுடன் மிகையில்லாத யதார்த்தமாக எழுதப்பட்ட இந்நாவல் தமிழில் எழுதப்பட்ட மிகமுக்கியமான நாவலாகக் கருதப்படுகிறது

எழுத்து, பிரசுரம்

தலைமுறைகள் நீல பத்மநாபனின் மூன்றாவது நாவல். நாகர்கோயில் ஜெய்குமாரி ஸ்டோர்ஸ் என்னும் புத்தகக்கடை தலைமுறைகள் நாவலை வெளியிட்டது. நீல பத்மநாபனின் சொந்தச் செலவில் இந்நூல் வெளியாகியது என அவர் பதிவுசெய்திருக்கிறார்.

கதைச்சுருக்கம்

தலைமுறைகள் நாவல் இரணியல்செட்டிமார்களின் குடும்ப ஆசாரங்கள், குடித்தொன்மங்கள் ஆகியவற்றை நுட்பமாக அவர்களின் உறவுமுறைகள் மற்றும் பேச்சுமொழியுடன் சித்தரிக்கிறது. பழம்பெருமையின் எச்சமாக இருக்கும் கூனன்காணிப்பாட்டா சொத்துக்களை அழித்தவர். ஆனால் காலம் மாறுவதை உணராதவர். கதைநாயகன் திரவியின் அக்கா நாகுவை செவத்தபெருமாள் என்பவன் மணக்கிறான். குழந்தைப்பேறுக்கு தகுதியற்றவள் என்று சொல்லி அவளை ஒதுக்கிவிடுகிறான். கல்வி கற்று ஆசிரியராக ஆகும் திரவி அது தவறான குற்றச்சாட்டு என மருத்துவரீதியாக நிரூபித்து நாகுவை மறுமணம் செய்து அனுப்ப முயல்கிறான். அதில் வரும் சிக்கல்களும் நாகுவை மணக்கவிருக்கும் மணமகனை செவத்தபெருமாள் கொலைச்செய்ய, நாகு தற்கொலை செய்ய, திரவியின் முயற்சி நிறைவேறாது போவதுமே நாவலின் கதை. சிங்கவினாயக தேவஸ்தானத்து பிள்ளையார் கோயில் நிர்மால்ய பூஜையின் தீபாராதனை மணியோசை சிதறல்களில் துவங்கி அதே மணியோசையில் முடிவடைகிறது நாவல்

கதைமாந்தர்

- திரவி - கதைநாயகன், ஆசிரியர்
- நாகு - திரவியின் அக்கா. அவளுக்கு மறுமணம் புரிந்துவைக்க திரவி முயல்கிறான்
- செவத்தபெருமாள் - நாகுவை மணந்து பின் ஒதுக்கிவைக்கும் கணவன்
- கூனன்காணிப் பாட்டா - திரவியின் தாத்தா

- உண்ணாமலை ஆச்சி - திரவியின் பாட்டி, கூனன்காணிப்பாட்டாவின் அக்கா

இலக்கிய இடம்

நீல பத்மநாபனின் தலைமுறைகள் நாவலில் கதைசொல்லவும் பேச்சுமொழிக்கு அணுக்கமான நடையை பயன்படுத்தியிருக்கிறார். இது க.நா.சுப்ரமணியம் போன்ற விமர்சகர்களால் பாராட்டப்பட்டது, மரபான வாசகர்களால் எதிர்க்கப்பட்டது. "நீல பத்மநபனின் தலைமுறைகள் தமிழ் உரைநடைப்போக்கில் முக்கியமானதோர் திருப்புமுனையாகும்.பேச்சுத்தமிழ் இலக்கியப் படைப்புக்குரியதே என்று செயல்முறையில் செய்துகாட்டிய சாதனை நீலபத்மநாபனுடையது. இதை ஆங்கில மொழியில் ஜேம்ஸ் ஜாய்ஸ் யுலிஸஸ் நாவல் மூலம் செய்துகாட்டிய சாதனையுடன் ஒப்பிடலாம் *என்று அசோகமித்திரன் குறிப்பிடுகிறார் (கால ஓட்டமும் தமிழ்நடையும். கல்கத்தா தமிழ் மன்ற வெள்ளிவிழா மலர்)*

இந்நாவலின் மொழிநடை மிக நிதானமானது. உண்ணாமலை ஆச்சி, திரவி ஆகியோரின் பேச்சு, நினைவுகூரல் வழியாக கதை நகர்கிறது. "பெரும்பாலான வெற்றிகரமான இந்திய நாவல்களில் அமைந்திருப்பதைப் போல, நாவலின் தொடக்கம் சாவதானமானதாகவும், மெதுவாகவும் அமைந்து நாவல் முழுமைக்கும், நாவலின் நடையை ஒழுங்கமைத்துக் கொடுக்கிறது. கற்பனை நாவலாசிரியன் மனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான விஷயம், நாவலின் நடை, இந்தியாவில் வாழ்க்கை மிகவும் நிதானமானதாகும். இங்கு பெரும்பாலானவர்களுக்கு என்ன செய்வது என்று புரியாமலிருக்கிற அளவிற்கு அதிக நேரம் இருக்கிறது. மேலும், யதார்த்த வாழ்க்கையையும், யதார்த்தமான குணச்சித்திரங்களையும் உண்மையாகச் சித்தரிப்பதற்கு விவரங்களைச் சாவதானமாக அமைப்பது இந்திய நாவலாசிரியனின் வலுவான அம்சங்களில் ஒன்றாகும்" என்று விமர்சகர் க.நா.சுப்ரமணியம் சொல்கிறார்.

'இந்தியச் சூழ்நிலையில் விமரிசனப் பரீட்சைகளை எதிர் கொண்டு நிற்கக்கூடிய ஓரிரு டஜன் நாவல்களில் 'தலை முறைகளும் ஒன்று. சிறப்பு வாய்ந்த திறமையான ஒரு கற்பனை முயற்சி. உத்திபூர்வமாகவும் சிறந்த படைப்பு. நாவலின் பல பகுதிகளில் ஆசிரியர் கையாண்டிருக்கும் உத்திகள் பெரும்பாலும் உணர்வுபூர்வமற்றிருந்த போதிலும், மானுட யதார்த்தத்துக்கும் அனுபவத்துக்கும் அவை நெருங்கிய தொடர்பு கொண்டவை' என்று மதிப்பிட்டு கூறுகிறார். க.நா.சுப்ரமணியம். 'தலைமுறைகள் அவ்வகையில் ஒரு முன்னோடியாக அமைந்தது. நாம்

முதலில் எழுத வேண்டியது கனவுகளையல்ல, நிதரிசனத்தை என்று அது கற்பித்தது. எந்தக் கனவும் நிதரிசனம் சார்ந்து செயல் படும் போதே முக்கியத்துவம் பெறுகிறது என்று பொட்டில் அடித்தது போல சொல்லியது' என்று ஜெயமோகன் மதிப்பிடுகிறார்.[2]

நீல பத்மநாபன் எழுதிய **'தலைமுறைகள்' (1968)**, குமரி மாவட்ட இரணியல் செட்டியார் சமூகத்தின் சமூக, கலாச்சார வாழ்வை விவரிக்கும் ஒரு முக்கிய வட்டார வழக்கு நாவலாகும். திரவி என்ற கதாபாத்திரத்தின் பார்வையில், மூன்று தலைமுறைகளின் கதையை, பாரம்பரியம் மற்றும் நவீன மாற்றங்களுக்கு இடையிலான போராட்டத்தை இந்நாவல் படம்பிடித்துக் காட்டுகிறது.

தலைமுறைகள் நாவலின் முக்கிய சிறப்பம்சங்கள்:

- **ஆசிரியர்:** நீல. பத்மநாபன்.
- **பின்னணி:** கன்னியாகுமரி மாவட்டம், இரணியல்.
- **மையப்பொருள்:** ஏழூர் செட்டியார் சமூகத்தின் கலாச்சாரம், சடங்குகள், மற்றும் குடும்ப உறவுகள்.
- **மொழி நடை:** தமிழில் வட்டார மொழியையே (Nagercoil slang) கதைசொல்லும் மொழியாகப் பயன்படுத்திய முன்னோடி நாவல்களில் இதுவும் ஒன்று.
- **கதை மாந்தர்கள்:** திரவி (முக்கிய கதாபாத்திரம்), உண்ணாமலை ஆச்சி, நாகருபிள்ளை, நாகம்மக்கா, சிவந்தபெருமாள்.
- **கருப்பொருள்:** பாரம்பரிய வழிபாட்டு முறை, ஆணாதிக்க சமுதாயத்தின் கட்டுப்பாடுகள் மற்றும் அதில் ஏற்படும் மாற்றங்கள்.

இந்த நாவல், ஒரு குடும்பத்தின் கதை வழியாக, ஒரு சமூகத்தின் கலாச்சார அடையாளங்களை ஆவணப்படுத்துகிறது. கௌதமனின் 'மகிழ்ச்சி' திரைப்படத்தின் மூலவடிவமாக இந்நாவல் அமைந்தது.

அறக்கோபமே என் எழுத்து

நீலபத்மநாபன்

https://www.jeyamohan.in/299/

நாகர்கோயிலில் 1-3-08அன்று மாலை ஐந்தரை மணிக்கு நீலபத்மநாபனுக்கு சாகித்ய அக்காதமி விருது கிடைத்தமைக்காக பாராட்டுவிழா நடைபெற்றது.

அறிமுக உரை நிகழ்த்திய பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி பேராசிரியர் பெர்னாட் சந்திரா நீலபத்மநாபனின் இலக்கிய வாழ்க்கையை சுருக்கமாக விவரித்தார். பொறியியலாளராக பணியாற்றி ஓய்வுபெற்ற நீலபத்மநாபனுக்கு இப்போது எழுபதுவயது. ஐம்பது வருடங்களாக அவர் எழுதிவருகிறார். அவரது தலைமுறைகள் தமிழில் வட்டாரவழக்கை ஓர் இலக்கிய உத்தியாக முன்வைத்த முன்னோடியான ஆக்கம். அதை அடையாளம்கண்டுகொண்டு பிரசுரிக்க பேராசிரியர் ஜேசுதாசன் காரணமாக அமைந்தாரென்றால் அதை இலக்கிய உலகில் முன்னிறுத்தியவர் விமரிசகரான க.நா.சுப்ரமணியம். அப்படைப்பின் அலங்காரங்களும் மிகையும் இல்லாத யதார்த்தமும் சின்னஞ்சிறிய கலாச்சாரத் தகவல்களும்தான் தன்னை மிகவும் கவர்ந்தன என்று க.நா.சு சொல்கிறார். அதன்பின் வந்த பள்ளிகோண்டபுரம், உறவுகள் ஆகிய நாவல்களும் நீலபத்மநாபனின் தனித்த அழகியலை மேலெடுத்துச் சென்றவை.

நீல பத்மநாபனின் எழுத்து தனக்குள் பேசிப் பேசி தன்னைக் கண்டடையும் தன்மை கொண்டது. பைபிளில் இலக்கிய நுட்பம் கொண்ட ஒருபகுதி வயோதிக யோபுவின் புலம்பல்கள். அந்தப்பகுதியின் அழகுடன் திகழ்பவை அவரது நாவல்கள் என்றார் பெர்னாட் சந்திரா.

தலைமையுரை ஆற்றிய எழுத்தாளர் பொன்னீலன் நீலபத்மநாபன் தனக்கெல்லாம் மூத்த தலைமுறையைச் சேர்ந்த படைப்பாளி என்றார். அவரது இளமையிலேயே அவரது பெரிய நாவல்கள் வெளிவந்துவிட்டாலும்கூட மிகவும் பிந்தியே அவருக்கு இப்போது சாகித்ய அகாதமி விருது அளிக்கப்படுகிறது. ஆனால் இலக்கிய உலகில் அவரது இடம் நெடுங்காலம் முன்னரே உறுதிப்பட்டுவிட்ட ஒன்றாகும். நீல பத்மநாபனின் எழுத்து முழுக்க முழுக்க அவரது மண்ணில் வேர்கொண்டது. ஆகவே உண்மையானது. நேர்மையே அதன் வலிமை என்றார்

தொடர்ந்துபேசிய விமரிசகர் ராஜமார்த்தாண்டன் நீலபத்மநாபன் எழுதியகாலத்திலேயே அப்படைப்புகளை தன் பேராசிரியரான ஜேசுதாசன் அறிமுகம் செய்துவைத்தார் என்று சொன்னார். நீலபத்மநாபனின் எழுத்துகள் எந்தவிதமான உத்தி நடை

உணர்ச்சிகரம் ஆகியவற்றின் உதவி இல்லாமல் தன் நேர்மை மூலமே நம்மைக் கவர்பவை என்றார்.வேதசகாய குமார் நீலபத்மநாபன் அவரது மையக் கதாபாத்திரங்களின் பலவீனங்களையும் விரிவாகச் சொல்லி நமக்கு மனிதமனத்தின் விபரீதங்களையும் சிக்கல்களையும் புரியச்செய்த படைப்பாளி என்றார்

ஏற்புரை வழங்கிய நீலபத்மநாபன் சிறுவயதில் தான் ஒரு இலட்சியவாதியாக இருந்ததாகவும் மனிதமனத்தின் உன்னதங்களைப்பற்றிய ஒரு கனவு தன்னை இயக்கியதாகவும் சொன்னார். ஆனால் அன்றாடவாழ்க்கையில் கண்ட அறவீழ்ச்சிகளும் கள்ளங்களும் தன்னை கொதிக்கச்செய்தன. தன் இலக்கிய ஆக்கத்தின் பின்னாலுள்ள மனஎழுச்சி எப்போதும் இதுவாகவே இருந்துள்ளது. மனிதர்களின் சிறுமை, போலித்தனம் ஆகியவற்றையே அதிகமும் எழுதிவந்தேன் என்றார் நீலபத்மநாபன்

ஆனால் வயதாக ஆக மனிதவாழ்க்கை அப்படித்தான் என்ற தெளிவு உருவாகியது. மனிதவாழ்க்கை என்பது வாழ்வதற்கான போராட்டம் மட்டுமே. ஆகவே மனிதர்களை அப்படி உன்னத மதிப்பீடுகளை மட்டும் வைத்து எடைபோடக் கூடாது. இந்த உணர்ச்சி வந்தபின்னர் மெல்லமெல்ல கோபம் குறைந்துவிட்டது. ஆகவே எழுத்தும் குறைந்துவிட்டது என்றார் நீலபத்மநாபன்.

அ.கா.பெருமாள் நன்றி சொன்னார். நீல பத்மநாபன் குமரி மண்ணின் மைந்தர், அவர் பிறந்துவளர்ந்தது திருவனந்தபுரத்தில் என்றாலும் அவரது பூர்வீக ஊர் தக்கலைக்கு அருகேயுள்ள நெய்யூர். ஆகவே அவரைக் கவுரவிக்க இக்கூட்டத்தை கூட்டியது மிகவும் சிறப்பான ஒன்று. கூட்டத்தை ஏற்பாடு செய்த ஜெயமோகனுக்கும் நெய்தல் அமைப்புக்கும் நன்றி என்று சொல்லி முடித்தார்.

ஒன்றரைமணி நேரத்தில் கூட்டம் முடிந்தமையால் மேலும் ஒருமணிநேரம் வெளியே கூடிநின்று அரட்டை அடிகக் வருகையாளர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது.

நாஞ்சில் நாடன்

நீல. பத்மநாபன் இலக்கியத் தடம்

https://nanjilnadan.wordpress.com/2011/11/11/%E0%AE%A8%E0%AF%80%E0%AE%B2%E0%AE%AA%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%AE%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%AA%E0%AE%A9%E0%AF%8D/

கட்டுரை என்பது தீவிரமானதோர் மொழியில், அதற்க்கானதோர் வறட்டுத்தனத்துடன், வாசகனுக்கு அந்நியமான பாணியில் பெரும்பாலும் எழுதப்படுகிறது. படைப்பிலக்கியவாதி கட்டுரை எழுத வரும்போது, மொழி இயல்பானதாகவும் சற்று உணர்வுபூர்வமான அணுகுமுறையுடனும் ஆக்கம் கொள்கிறது.

காலேஜ கேம்பஸ்

கல்லூரிநினைவுகள்
எழுத்தாளர நீலபத்மநாபன்

http://neelapadmanabhan.com/interviews.html

எழுத்தாளர் நீல பத்மநாபனுக்கு கேரள பல்கலைக்கழக கல்லூரியில் அடியெடுத்து வைக்கும்போதே அவருடைய மனது குதுாகலிக்கிறது. பிரமாண்டமான காம்பவுண்டு சுவரைத்தாண்டி அழகான பூங்காவைத்தாண்டி கம்பீரமாக நிற்கிறது 1866.ல் கட்டப்பட்ட இந்த கல்லூரி. முன்புறம் ராஜராஜவர்மாவின் சிலை..நீல பத்மநாபன் 1956-58

காலகட்டத்தில் படித்த இயற்பியல் துறை படிக்கட்டில் ஏறி வராண்டாவைப்பிடித்தபடி பழைய நினைவுகளை அசைபோடுகிறார். பிசிக்ஸ் மெயினாக இருந்தாலும் தமிழ்த்துறையோடு அதிக தொடர்புவைத்திருந்தார் நீல பத்மநாபன். கல்லூரி நினைவுகளுக்காக நம்முடன் பயணித்தவர் தமிழ்த்துறை நூலகத்தில் சென்றதும் அங்கிருந்த மாணவிகளுக்கு அவருடன் உரையாடுவதில் மிகவும் மகிழ்ச்சி. அங்கிருந்த கிறிஸ்டில்டா என்ற மாணவி நீல பத்மநாபன் கதைகளைப்பற்றி முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்வதாக கூற மனதுக்குள் மத்தாப்பூவாய் முகம் மலர்கிறத.

அந்த மாணவியும் மற்ற மாணவிகளும் கேட்ட சந்தேகங்களை பொறுமையுடன் நிவர்த்திச்செய்கிறார். சில ஆலோசனைகளும் வழங்குகிறார். இந்தகல்லூரியில் இருந்து வெளிவந்து ஆண்டுகள் 54 கடந்து விட்டபின்னரும் இக்கல்லூரியின் உடனான உறவு இன்னும் அகல வில்லை. பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக அடிக்கடி வந்து போகிறார். தமிழ்த்துறையைச்சேர்ந்த அனைவருக்கும் அவர் பரிச்சயமானவராக இருக்கிறார். இளம் தலைமுறை மாணவ மாணவியர்கள் அவரை வணக்கத்துடன் வரவேற்று நலம் விசாரிக்கின்றனர்.

அங்கே சுற்றிச்சுற்றி வந்து பழைய நினைவுகளை நம்மிடம் பகிர்ந்து கொள்ளத்துவங்கினார்; நகரச்சந்தடியிலிருந்து சற்று விலகியிருந்த
"நாலாஞ்சிறை எனும் இடத்திலிருந்த மார் இவானியேஸ் கல்லூரியில் இண்டர்மீடியேட் முடிச்சதும் இந்த கேரளபல்கலைக்கழக கல்லூரியில் பி.எஸ்சி இயற்பியலில் சேர்ந்தேன். இண்டர்மீடியேட்டில் நல்ல மார்க் இருந்ததால் விரும்பிய குரூப் இங்கே கிடைத்து. நான் பள்ளியில் மலையாள மீடியம் படித்தாலும்(கல்லூரிகளில் ஆங்கில மீடியம்) பிறந்து வளர்ந்தது, மழலை பேசி வளர்ந்தது எல்லாம் தாய்மொழி தமிழில் என்பதால், சிறுவயதிலேயே நான் எழுதுவது தமிழில் தான்.கையெழுதுப்பத்திரிகை நடத்துவது, கவிதைகள், கதைகள், தெருவில் சிறுவர்கள் நடிப்பதற்கு நாடகங்கள்-இப்படிபல்வேறு விஷயங்களில் எழுத்தார்வமுடன் இருந்திருக்கிறேன். இங்கே நான் இயற்பியல் பாடம் எடுத்திருந்தாலும் ,இங்குள்ள தமிழ்த்துறையின் மீதான என் அக்கரையும் அபரிமிதமானஆர்வமும் காரணமாக இயற்பியல் பாடத்தை கோட்டை விட்டுவிடவில்லை.

என் அறிவியல், கணக்கு படிப்பு,எதையும் வள வளவென்றில்லாமல், கணக்கு நுணுக்கத்துடன்(arithmetic accuracy) படைப்புத்துறையில் கையாளும் பயிற்சியை அந்த காலத்திலேயே எனக்கு தந்துவிட்டது என்கலாம்.. அப்போது,தமிழ்த்துறைத்தலைவராக பேராசிரியர் ஜேசுதாசன் இருந்தார்.மார் இவானியேஸ் கல்லூரியில் என் ஆங்கில ஆசிரியராக இருந்த டி.கெ.துரைசாமி(நகுலன்)யும்-அவர் அடிக்கடி ஜேசுதாசன் சாரைப்பார்க்க இங்கேயும் வருவார்,இங்கிருந்த ஜேசுதாசன் சார் அவர்களும் என்து எழுத்தார்வத்தை மேலும் மேலும் வளர்த்தவர்கள் ஆவார்கள். அத்துடன் இங்கு பணியாற்றிய பேராசிரியர்கள் சா.வே. சுப்பிரமணியம், அழகியசொக்கலிங்கம், வீரபத்திர செட்டியார், ஆங்கிலத்துறையில் என் ஆசிரியர்அய்யப பணிக்கர் ஆகியோர் மறக்க முடியாதவரகள்.ஜேசுதாசன் சார்கம்ப ராமாயணம் போன்ற பழ்ந்தமிழ் இலக்கியம் மட்டுமல்ல, நவீன இலக்கியத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அக்காலத்தில் தமிழ் மாணவர் சங்கம் சார்பில் நடந்த கட்டுரைப்போட்டியில் பரிசுபெற்ற நான் அப்பரிசை கா.நா.சுப்பிரமணியம் அவர்கள் கையால் வாங்கியது மறக்க முடியாத நிகழ்ச்சி. பிரபல தமிழ் இலக்கியவாதிகள் இங்கு வரவழைக்கப்பட்டுசொற்பொழிவுகள் நடக்கும். தொ.மு.சி. ரகுநாதன் ஒருமுறை இங்கு வந்திருந்தபோது சுந்தரராமசாமி அவருடன் வந்திருந்தார். அப்போதுதான் சுந்தரராமசாமி இலக்கிய உலகில் தடம்பதிக்கத்துவங்கியிருந்தார்.

இங்கே படிக்கும்போது கல்லூரி ஆண்டுவிழா மலர்களில் என்னுடைய படைப்பு இடம் பெறுவதுண்டு. என்னுடையை ஆரம்பகால நல்ல சிறுகதைகளில் ஒன்றாக பேசப்படும் “பதில் இல்லை!” சிறுகதை இங்குள்ள ஆண்டுமலரில் தான் முதலில் வெளியானது. பொதுவாக பெரும்பாலான கதைகளில்,குறிப்பாக அந்த இளம் பருவத்தில், ஆண், பெண் பிரச்சனைகளைத்தான் சொல்வாங்க, ஆனால் அதிலிருந்து மாறுபட்டு,ஒரு சாலைவிபத்தில்சிக்கிக்கொண்ட ஒரு சிறுவனை மையமாக வைத்து எழும் பிரச்னையை சித்தரித்த அந்தச்சிறுகதை பெரிதும்பேசப்பட்டது.

நான் சற்றுசங்கோஜமான டைப் மாணவன். ஆனா அதேவேளை படிப்பு மட்டும் இல்லாம பல்வேறு விஷயங்களில் எனக்கு ஈடுபாடு இருந்தது. கலை, இலக்கியம், அரசியல்

எல்லாவற்றிலும் ஈடுபாடு இருந்தது. இந்த கல்லூரியில் அதற்கெல்லாம் வாய்ப்பிருந்தது. நிறைய மகிழ்ச்சியைத்தந்திருக்கிறது. வீட்டிலிருந்து கல்லூரிக்கு அனேகமாக பஸ்சில்தான் வந்து செல்வேன். சில வேளைகளில் நடந்தும் வந்திருக்கிறேன்.

என்னுடைய குடும்பம் பெரிய குடும்பம். அப்பா ஒரு நிறுவனத்தில் வேலைபார்த்துக்கொண்டிருந்தார். . நாங்கள் பத்துபேர்களில் மூத்தவன் நான். அதனால் எனக்கு பொறுப்பு இருப்பதாக உணர்ந்தேன். எனக்கு கீழே உள்ளவர்கள் படிச்சுகிட்டிருந்தாங்க. நான் படிச்சு நல்ல மார்க் வாங்கி பாஸாகி, ஏதாவது வேலை பார்த்தால் அப்பாவின்சுமை குறையுமே என்று நினைச்சிருந்தேன்.இன்னிக்குள்ள கேம்பஸ் இண்டர்வியூ மாதிரிஅன்னிக்கு ஒண்ணும் கிடையாது. நான் பி.எஸ்சி படிச்சுகொண்டிருக்கும்போதே கேரளா அரசின் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதி வெற்றி பெற்றேன்.வேலைக்கு வரச்சொல்லி உத்தரவு வந்தது. பி.எஸ்.சி பரீட்சை தேர்வு எழுதி முடித்த கையோடு நான் திருச்சூரில் போய் வேலையில் சேர்ந்தேன்..

விடுமுறைக்காலம் முடிந்ததும், பி.எஸ்சியில் நல்ல மார்க் இருந்ததால் அப்பா என்னை இன்ஜினியரிங் படிக்கக் கட்டாயப்படுத்தியதினால், அதன்பின்னர் இன்ஜினியரிங்க கல்லூரியில் சேர்ந்துநான்கு வருடங்கள் படித்தேன். (அங்கு படிக்கும்போது நான் எழுதி, இயக்கி, நடித்த ”என்ஜினீயர்” என்ற தமிழ் நாடகத்திற்கு அனைத்திந்திய வானொலி நாடகப்போட்டியில் முதல் பரிசு கிடைத்தது என்பதையும் இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.)

இந்த பல்கலைக்கழக கல்லூரியை எடுத்துக்கொண்டால் மிகவும் பழமையானது.. 1866.ல் கட்டப்பட்ட இந்தக்கல்லூரி இன்னும் பழமை மாறாமல்புதுமைக்கும் இடம் கொடுத்து மிளிர்கிறது. இங்குள்ள இயற்பியல் துறையை அடுத்து வேதியியல் துறை, அதற்கடுத்து மாணவிகள் வெயிட்டிங்க் ஹால் இருந்தது. அதனால் இந்த பகுதி எப்பவுமே கலகலப்பாக இருக்கும். மாணவர்களுக்கு மிகவும் பிடித்தமான இடம். மாணவர்களின் வீர தீர பராக்கிரமங்களை இந்த பகுதியில்தான் அதிகம்காணமுடியும். மாணவ, மாணவிகளின் ரொமான்ஸை தூரத்தில் இருந்து ரசிப்பதோடு நான் என்னை

கட்டுப்படுத்திக்கொண்டேன்.அழகான மாணவிகள் நிறைய பேர் என்னுடனும்படித்தார்கள்.

சிலரைப்பார்க்கும்போது அவர்கள் மீது மரியாதை மட்டுமல்ல,ஒன்றிரண்டுபேர்களிடம் ஆசையும் வந்திருக்கிறது. ஆனால் அந்த பதினெட்டு வயசு பிராயத்தில், வம்புதும்புக்களில் மாட்டிக்கொள்ள விருப்பமில்லாமல், உள் உணர்வுகளை மனதுக்குள் புதைத்துக்கொண்டேன்.என்னுடைய முதல் நாவல் "உதய தாரகை"யில் என் கல்லூரி கால நிகழ்வுகளும், நினைவுகளும் ஒரளவுக்குப் பதிவாகியிருக்கின்றன என்று நினைக்கிறேன். தரமான இலக்கியத்தில் எனக்கு அதிக ஈடுபாடு ஏற்பட அடித்தளமாக இருந்தது இந்த பல்கலைக்கழக் கல்லூரி என்றால் அது மிகையாகாது.

இன்று, இக்கல்லூரியில்75-வது வயதை நெருங்கிக்கொண்டிருக்கும்போது நிற்கையில், வயது மீண்டும் 18ஆனதைப்போல் தோன்றுகிறது. பெரிய கட்டுப்பாடொன்றும் இங்கே அன்றும் இன்றும் இல்லை.. மாணவர்களை அடக்குமுறைகொண்டு நடத்தும் பழக்கம் இல்லை. சுதந்திரம் இருந்ததால் படிப்பின் கூட அவரவருக்கு ஈடுபாடுள்ள ஏனைய துறைகளிலும் தம் திறமையைக் காட்டி முன்னுக்கு வர முடிந்தது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு நான்என்றுநினைக்கிறேன்.

கல்லூரியின் அருகிலேயே சட்டசபை, செயலகம்,வி.ஜெ.ட்டி ஹால், பல்கலைக்கழக செனட் ஹால், எல்லாம் இருந்ததால் அமைச்சர்கள்,அரசியல் தலைவர்கள், மட்டுமல்ல, கலை இலக்கியங்கள், ஏனையத்துறைகளில் பிரபலமானவர்களையும் நெருக்கமாய் பார்க்கவும் பழகவும் முடிந்திருக்கிறது.

தமிழ்ப்பாடத்தில் அதிக விருப்பத்துடன் இருந்ததால்,என்னுடன் படித்த இயற்பியல்மாணவர்கள் என்னை கிண்டல் செய்வார்கள்."பேசாமல் தமிழ் மேஜரை எடுத்துப்படித்திருக்கலாமே!" என்று.நான் சிரிப்பேன். ஒருமுறை எம்.ஜி.ஆர். அவர்கள் திருவனந்தபுரத்தில் நாடகம் நடிப்பதற்காக வந்திருந்தார். அவரை கல்லூரிக்கு அழைத்து பேச வைத்தோம். மறக்காமல் அவருடன் போட்டோவும்எடுத்துக்கொண்டோம். அதே எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சர் ஆனபின்னர்,அவர்


கையிலிருந்து, என் " உறவுகள்"நாவலுக்காக ராஜா சர் அண்ணாமலைசெட்டியார் விருது வாங்கியதும் நான் சற்றும் எதிர்பார்த்திராத அனுபவம்.

அதுபோல் ஆங்கிலத்துறை பேராசிரியர் அய்யப்ப பணிக்கரின் வகுப்புகள் இனிமையானவை." அக்காலத்தில் இக்கல்லூரியில் ஆசிரியர்களாக பணியாற்றிக்கொண்டிருந்த இடற்பியல் பேராசிரியர் வெங்கடேஸ்வரன் சார், கேரளத்தில் பிரபலமான நாடகாசிரியர் என்.கிருஷ்ணப்பிள்ளை சார், விமர்சகர் குப்தன் நாயர் சார், சர்வோதயத் தலைவரும் புகழ் வாய்ந்த ஆங்கில கவிஞருமான ஜி.குமாரபிள்ளை சார் இவர்கள் முகங்களும் இங்கு நிற்கும் இந்த நல்லநேரத்தில் என்னில் நிறைகின்றன என்று மகிழ்ச்சியுடன் கூறினார் எழுத்தாளர்நீலபத்மநாபன்.

திருவட்டாறு **சிந்துகுமார்**
குமுதம் 17-10-2012

தந்தை மகன் உறவும் இரு படைப்பாளிகளும்

https://www.jeyamohan.in/162644/



முப்பதாண்டுகளுக்கு முன் ஒரு முறை நீண்ட நடைப்பயணம் ஒன்றில் சுந்தர ராமசாமியுடன் நீலபத்மநாபனைப்பற்றி பேச நேர்ந்தது. அப்போது நீல பத்மநாபனின் முழுப் படைப்புகளையும் பற்றி ஒரு பெருந்தொகுப்பு வந்திருந்தது. நீலபத்மநாபனின்

நாவல்களைப் பற்றியும் கதைகளைப் பற்றியும் வெவ்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட ஏறத்தாழ அனைத்து கட்டுரைகளுமே அதில் தொகுக்கப்பட்டிருந்தன. அந்த தொகுதியை முதன்மை எடிட்டராக டாக்டர் கே.எம்.ஜார்ஜ் இருந்து ஒருங்கிணைக்க, ஆசிரியர் குழுவில் கே.நாச்சிமுத்து எம்.நயினார் டி.பெஞ்சமின். கே வானமாமலை ஆகியோர் இருந்தனர். பாரதி நேஷனல் ஃபோரம் திருவனந்தபுரத்திலிருந்து வெளியிட்டது. 2001-ல் வெளிவந்தது.

அந்நூல் பற்றி அன்று சொல் புதிது இதழில் வந்த குறிப்பை சுந்தர ராமசாமி கடுமையாக விமர்சனம் செய்தார். 'இதேபோல ஒரு தொகுப்பை இன்றைய சூழலில் இன்னொருவர் முயன்று வெளிக்கொண்ர முடியாது குறிப்பாக 1950களில் இருந்தே நீலபத்மநாபனின் படைப்புகளைப்பற்றி எழுதப்பட்ட ஒவ்வொரு வரியும் எடுக்கப்பட்டு இவ்வாறு தொகுக்கப்பட்டு சேர்க்கப்படுவது இயல்வதே அல்ல' என்றார். 'அவை நீலபத்மநாபனால் தொகுக்கப்பட்ட அவருடைய தனிப்பட்ட கோப்புகளில் இருந்தவை. அந்நூல் நீல பத்மநாபனால் தன்னைப்பற்றி தயாரிக்கப்பட்டது இவர்களின் பெயர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன' என்றார்.

நான் அது உண்மையாக இருந்தாலும் கூட சிற்றிதழ் சூழலிலிருந்து வரும் ஒரு நவீன எழுத்தாளருக்கு அப்படி ஒரு பெருந்தொகுதி வருவது ஒரு முன்னுதாரணம்தான். எல்லாவகையிலும் அது வரவேற்புக்குரியது. பிற்கால ஆய்வாளர்களுக்கு அது ஒரு மிகப்பெரிய கொடை. சிற்றிதழ் சார்ந்த எழுத்தாளர்கள் என்றால் ஒழுங்கற்றும் ஆய்வுநோக்கற்றும் இருக்கவேண்டியதில்லை. எந்த இடத்திலும் தன்னை முன்னிறுத்தாமல் இருப்பது ஒருவருடைய இயல்பாக இருக்கலாம். ஆனால் அது ஒரு நிபந்தனையாக வேண்டியதில்லை. அது ஒரு தனிச்சிறப்பும் அல்ல. ஒரு கலைஞன் காலத்தின் முன்னும் சமூகத்தின் முன்னும் தன்னை முன்வைப்பதில் ஒன்றும் பிழையில்லை என்று கூறினேன்.

அத்தகைய ஒரு பெருந்தொகை சுந்தர ராமசாமிக்கு வருமெனில் அதை நான் வரவேற்பேன் என்று சொல்லி அவரும் தன்னுடைய


தனிக்கோப்புகளில் ஏராளமான கடிதங்களையும் குறிப்புகளையும் பிரசுரமான படைப்புகளையும் ஆவணப்படுத்தி வைத்திருப்பதை நான் கண்டிருப்பதையும் குறிப்பிட்டேன். தனிப்பட்ட முறையில் ஆவணப்படுத்தும் வழக்கம் எனக்கில்லை. என்னுடைய அலைந்து திரியும் இயல்புக்கு அது ஒத்துவருவதுமில்லை. ஆனால் அது ஒரு உயர்ந்த பண்பல்ல என்றேன். பின்னாளில் சுந்தர ராமசாமியின் ஆய்வடங்கல்கள் அவருடைய சொந்த சேகரிப்பை ஒட்டியே வரப்போகின்றன என்றும் குறிப்பிட்டேன். சுந்தர ராமசாமி அதிருப்தியுடனேயே இருந்தார்.



சுந்தர ராமசாமி நீலபத்மநாபனைப் பற்றி உயர்வான கருத்து கொண்டவரல்ல. எதிர்மறையாகவே கடுமையாக பேசுவார். ஆனால் தலைமுறைகள் பள்ளிகொண்டபுரம் இருநாவல்களைப்பற்றி அவருக்கு மதிப்புண்டு. அவற்றைப் பற்றி சிறப்பாக எழுதியிருக்கிறார். உறவுகள் நாவல் அவருக்குப் பிடிக்கவில்லை. அன்று அதைப்பற்றி பேச்சு திரும்பியது. நான் எழுதிய ஒரு கட்டுரையில் உறவுகள் முக்கியமான நாவல் என்று சொல்லியிருந்தேன். சுந்தர ராமசாமி அதைக்கடுமையாக மறுத்தார். அது வழக்கமான அப்பா செண்டிமெண்ட் வெளிப்படும் ஒரு சாதாரணமான படைப்பு என்று சொன்னார்.

அதில் உள்ள உணர்வு நிலைகள் இயல்பாகவே எல்லாக் குடும்பங்களிலும் பெற்றோர் மேல் மகன்களால்

வெளிப்படுத்தப்படுபவை. பொதுவழிப்பாதையில் வெளிப்படும் அவ்வுணர்வுகளை அப்படியே பதிவு செய்வது இலக்கியத்தின் பணி அல்ல என்று சுந்தர ராமசாமி சொன்னார். அதற்கப்பால் உளவியல் ஆழங்களுக்குச் சென்று தந்தையின் மகனின் உறவுகளின் உள்ளடுக்குகளை ஆராய்வதே இலக்கியத்தின் பணி. உண்மையில் தந்தை மகன் எனும் உறவு இந்நாவலில் சொல்லப்படுவது போல ஒற்றைப்படையானது அல்ல என்றார் சுந்தர ராமசாமி.



நீலபத்மநாபனின் நாவலில் தந்தைக்கும் ராஜகோபாலுக்கும் இடையே எந்த கருத்து முரண்பாடும் இல்லை. ஆளுமை மோதல் எங்குமே இல்லை. தந்தையின் மீதான ஒவ்வாமைகள் என்று எதையும் மகன் நினைவுகூர்வதுமில்லை. இப்படி முழுமையான வழிபாட்டுணர்வு என்பது செயற்கையானது வலிந்து புனையப்படுவது தந்தை மகனும் இரு காலகட்டங்களைச் சார்ந்தவர்கள். தந்தை மகனைத் தன் நீட்சியாக கருதுகிறார். மகன்

அதை எதிர்க்கிறான். தன் தனித்தன்மைக்காக அவன் போராடுகிறான். ஆகவே அவர்களுக்குள் இருக்கும் மோதல் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. பிராய்டிய நோக்கில் அது இரு ஆண்களுக்கிடையேயான மோதலும் கூட. அவ்வாறு பிராய்டிய இருத்தலிய அடிப்படையில் ஆண்பெண் உறவையும் தந்தை மகன் உறவையும் நுணுகி ஆராய்வதே இன்றைய இலக்கியவாதிகள் செய்ய வேண்டியது. பிராய்டு நூறு கிலோமீட்டர் ஓடி வந்துவிட்டபிறகு மூன்றாவது கிலோமீட்டரில் ஒற்றைக்காலில் தத்தி தத்தி வந்துகொண்டிருப்பவர் நீல பத்மநாபன் என்று சுந்தர ராமசாமி சொன்னார்.

நான் அதை கடுமையாக மறுத்தேன். சுந்தர ராமசாமிக்கும் நீலபத்மநாபனுக்கும் அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவன் நான். முறையாக பிராய்டை படித்திருந்தேன். சுந்தர ராமசாமி உட்பட தமிழ் எழுத்தாளர்களைப் போலன்றி பிராய்டிய உளவியல் ஆய்வாளர்களுடன் சிலருடன் நேரடி தொடர்பும் உண்டு. பிராய்டிய சிந்தனை கொண்ட பேராசிரியர் எம்.என்.விஜயனுடன் அடிக்கடி தொடர்பு கொண்டிருந்தேன். டாக்டர் ரிதுபர்ணன் டாக்டர் என்.சந்திரசேகரன் ஆகியோரை சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன்.அத்துடன் உளவியல் அறிஞரான நித்ய சைதன்ய யதியுடன் அணுக்கமாகி இருந்தேன். உளவியல் மறுப்பாளரான ஆர்.டி.லெய்ங்-ஐ ஊட்டியில் நேரில் சந்தித்து உரையாடியிருந்தேன்.

ஆகவே நான் ஃப்ராய்டை ஓர் அறிவியலுண்மையை முன்வைத்தவராக நினைக்கவில்லை. அவருடையது ஓர் ஆய்வுக்கருவி, அல்லது ஒரு வகை ஊக முறை – அவ்வளவுதான். நித்ய சைதன்ய யதி வழியாக நான் அன்று கார்ல் யுங்கை படித்துக்கொண்டிருந்தேன். சொல்புதிது இதழில் சி.ஜி.யுங் எழுதிய கட்டுரைகளின் மொழியாக்கங்கள் அன்று வெளிவந்தன. மேலும் அன்று நரம்பியல் துறை மனம் என்பதையே மறுவரையறை செய்து ஃப்ராய்டை வெறும் இலக்கிய ஆசிரியனாக தள்ளிவிட்டிருந்ததை

நான் வாசித்து அறிந்துகொண்டிருந்தேன். சொல்புதிதில் ஆலிவர் சாக்ஸ் போன்றவர்களின் கட்டுரைகள் வெளிவந்துகொண்டிருந்தன.

இதற்கப்பால் எனக்கு என் தந்தையுடன் முரண்பாடும் கசப்பும் கொண்ட உறவுதான் இருந்தது. நீலபத்மநாபன் உறவுகளில் சொல்லப்படுவதுபோல அல்ல என்னுடைய உறவு. சுந்தர ராமசாமிக்கும் அவரது தந்தைக்குமான உறவும் என் தந்தையுடனான உறவுபோலத்தான். ஆனால் எங்கள் மதிப்பீடுகளை நீலபத்மநாபன் மேல் ஏற்றவேண்டிய தேவை இல்லை என்று நான் சொன்னேன். இந்திய சூழலில் தந்தை மகன் உறவை தீர்மானிப்பதென்பது பிராய்டிய உளச்சிக்கல்கள் அல்ல. அவை பிராய்டின் பார்வைகளே ஒழிய மனித குலத்துக்கு எப்போதைக்குமான வரையறுக்கப்படும் அறிவியல் உண்மை அல்ல சில நுட்பங்களைப் புரிந்துகொள்ள் அத்தகைய உளவியல் கருத்துகள் உதவியாக இருக்குமே ஒழிய அவற்றை அறுதியாக கொள்ள வேண்டிய தேவை இல்லை. நவீனத்துவம் சார்ந்த எதிர்மறை உளநிலையே ஃப்ராய்டிசம் முன்வைக்கப்பட்டதுமே அதை அப்படியே ஏற்கச்செய்கிறது. அதைவிட பலமடங்கு விரிவான, ஆழமான உளஅவதானிப்புகள் இந்திய யோகமுறைகளில் உண்டு என்றேன்.

இந்திய சூழலில் தந்தை மகன் உறவென்பது உபநிஷத் காலத்திலிருந்தே பல்வேறு வண்ணங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சாந்தோக்ய உபநிடதத்தில் வரும் ஆருணியாகிய உத்தாலகருக்கும் அவர் மகன் ஸ்வேதகேதுவுக்குமான உரையாடல் ஒரு உதாரணம். நசிகேதனின் தந்தைக்கும் அவனுக்குமான உறவு இன்னொரு உதாரணம். மகாபாரதம் தந்தை மகனுறவின் பல தளங்களாக விரித்துரைக்கும் ஒரு பெரும் படைப்பு.இங்குள்ள தந்தை மகன் உறவென்பது எளிய ஈடிபஸ் காம்ப்ளெக்ஸால் விளக்கத்தக்கது அல்ல. அது மேலும் விரிந்தது. யயாதிக்கும் புருவுக்குமான உறவு பிராய்டு கற்பனை செய்ததை விட மேலும் சிக்கலானது. மேலும் பல தளங்கள் கொண்டது.

மகாபாரதத்தில் வரும் உத்தாலகன் ஸ்வேதகேது உறவும் சரி, தேவிபாகவதத்தில் வரும் ஹிரண்யாக்ஷனுக்கும் பார்வதிக்குமான உறவும் சரி மிக நேரடியாகவே ஈடிபஸ் உளச்சிக்கலை சொல்லுவன. சொல்லப்போனால் ஃப்ராய்ட்

நினைத்ததை விட விரிவாகவும் கூர்மையாகவும். ஆனால் அதற்கப்பாலும் இந்திய மரபில் தந்தை மகன் உறவென்பது ஆசிரியன் மாணவன் என்ற தளமும் கொண்டது. இந்தியாவில் பெரும்பாலானவர்களுக்கு அவர்களுடைய முதல் ஆசிரியர் தந்தையே. பழைய காலகட்டங்களில் குலக்கல்வி தந்தையிடமிருந்தே பெறப்பட்டது. குலமுறையாக வரும் கலைகளும் அவ்வாறே அளிக்கப்பட்டன. இன்றும் கலைகளில் தந்தையிடமே முதல் அறிமுகத்தை பெறுகிறார்கள். அங்கு முதன்மை பெறுவது ஆசிரியர் மாணவர் என்ற உறவே ஒழிய உயிரியல் உறவல்ல.

தந்தை மகனின் உறவென்பது இந்திய சூழலில் வழித்தொடர்தல், வாரிசாதல் (Inheritance)என்னும் இன்னும் சிக்கலான உணர்வைச் சார்ந்தது. தந்தையின் தொடர்ச்சியாக தன்னை உணர்வதும், தந்தையின் ஆளுமையிலிருந்து மாறுபட்டு ஒரு ஆளுமையை தனக்கென உருவகித்துக்கொள்வதும், அதிலிருக்கும் முரண்பாடுகளும் தான் இந்தியாவில் தந்தை மகன் உறவை தீர்மானிக்கின்றன. எந்த வகையில் தந்தையை எடுத்துக்கொள்வது, எந்த இடத்தில் பொருத்திக்கொள்வது என்பதே இந்திய மகனின் சிக்கல். தந்தை இருக்கும் வரை அவருடைய வளரும் ஆளுமையை முழுமையாக தொகுத்துக்கொள்ள முடியாததனால் அவன் எப்பொழுதும் உளச்சிக்கலுக்கு ஆளாகிறான்.

தந்தையை வகுத்துக் கொள்ளுதற்கு அவருடைய அணுக்கம் தடையாக இருப்பதனால் வயது வந்த பிறகு அவரிடமிருந்து விலகிச் செல்லத்தொடங்குகிறான். உளத்தாலும் உடலாலும் விலகுகிறான் அவர் மேல் கேலியையோ விமர்சனத்தையோ வளர்த்துக் கொள்கிறான். அவரிடமிருக்கும் தீவிரமான பற்றை குறைத்துக் கொள்ளும் பொருட்டு கேலி, விமர்சனம் போன்ற உளவியல் நாடகங்களை அவன் ஆடுகிறான்.ஆனால் அகலமுயன்று அணுகும் உறவு அது.

இந்திய சூழலில் தந்தை மகன் உறவு மேலும் சிக்கலாக்குவது இங்குள்ள கடுமையான வாழ்க்கைப் போட்டி பிற நாடுகளைப் போலன்றி இந்தியாவில் ஒரு தந்தை தன் முழுவாழ்நாளையும்

மைந்தருக்கு செலவழித்தாலன்றி மைந்தரை சமூகத்தில் முதன்மைப்படுத்த முடியாது .அவையத்து முந்தியிருப்பச் செயல் என்பது தந்தையின் கடமையாக ஔவையால் சொல்லப்படுகிறது. தன்னையே தன் மைந்தருக்கு பலியிடுதல் என்பது இங்குள்ள தந்தைக்கான முன்னுதாரணமான வடிவமாக முன்வைக்கப்படுகிறது. மகனென்னும் நீ நானேதான் என்று உபநிஷத் கூறுகிறது. அந்த கொடையைப் பெற்றுக்கொள்ளும் மகனின் குற்றவுணர்வும் அதை வெல்லும் பொருட்டு அவன் உருவாக்கும் பலவிதமான உளநாடகங்களும்தான் முதன்மையாக இந்தியத் தந்தைமகன் உறவை தீர்மானிக்கின்றன. பிராய்டு சொல்வது போல அற்பமான பாலியல் முக்கோணம் அல்ல. ஒருவேளை அது அவ்வுறவில் இருந்தாலும் கூட மிக குறைவானதே. புறக்கணிக்கப்படும் அளவுக்குச் சிறியது.

இந்தியக் குடும்பங்களின் உறவென்பது இன்று தனிக்குடும்பங்களானாலும் கூட கூட்டுக்குடும்ப தன்மை உடையது தனிவீடுகளுக்குள் இருக்கும் ஒரு பெருங்கூட்டுக்குடும்பம் என்று இந்தியாவுடைய குடும்பங்களைச் சொல்ல முடியும். தந்தை மட்டுமல்ல தந்தையின் உடன்பிறந்தார்களும் தந்தையின் இடத்தில் இருக்கிறார்கள். அவர்களுடைய நண்பர்களும் தந்தையின் இடத்தில் இருக்கிறார்கள். அதற்கிணையாகவே தாய்மாமன் இங்கு தந்தையின் இடத்தில் இருக்கிறார். இங்கு ஒருவனுக்கு தந்தை என்பது தந்தையர் என்றே பொருள் படுகிறது தந்தையர் நிரை என்ற சொல்லையே நாம் கவிதைகளில் பார்க்க முடியும். அங்கு ஒரு தனி மனிதன் தந்தையாக இருக்கிறான், கூடவே தந்தையர் என்னும் பெரும் கருத்துருவின் வடிவமாகவும் இருக்கிறான்.

தந்தை என்பவன் ஒரு கூட்டு ஆளுமையாக ஒரு தொகுப்பு அடையாளமாகவே இருக்கிறான். ஒரு கருத்துருவமாகவே அவனை அணுக முடிகிறது. தந்தை மரபின் அடையாளமாக சென்ற காலத்தின் அடையாளமாக சமூகத்தின் ஒட்டுமொத்தத்தின் அடையாளமாகவே இருக்கிறான். ஆகவே அவன் இங்கே ஒரு மாபெரும் அதிகாரம். ஒருநவீன மேலைநாட்டுச் சூழலில் மைந்தன்

மேல் தந்தையின் அதிகாரம் இத்தனை முழுமையானதோ அனைத்து திசைகளிலிருந்தும் சூழ்ந்து கொள்வதோ அல்ல.

இந்தியா மூத்தோர் வழிபாடு நிறைந்த நாடு. அகவை முதிர்ந்த ஒவ்வொருவரும் தந்தையின் இடத்திற்கு செல்கிறார்கள். துறவியர் அரசியல் தலைவர்கள் தந்தை வடிவமாக போற்றப்படுகிறார்கள். இறைவன் அப்பனே அப்பனே என்று தந்தைவடிவமாக இங்கு நிறுவப்பட்டிருக்கிறான். பெருந்தந்தை என்னும் கருதுகோள் இந்திய உள்ளத்தை ஆட்டுவிக்கிறது. காந்தியோ காமராஜோ ஈ.வெ.ராமசாமியோ தந்தை வடிவமாகவே வந்து அடைகிறார்கள். இரட்டைமலை சீனிவாசன் அயோத்திதாசரோ இங்கே தந்தை உருவம்தான்.

இந்தக்கருத்துருவை எதிர்கொள்வதிலுள்ள சிக்கல்கள் என்ன உளத்தயக்கங்கள் என்ன என்பதை இன்று ஒரு நவீன இந்திய எழுத்தாளன் ஆராய வேண்டும். மாறாக துருப்பிடித்துப்போன பிராய்டிய உளப்பகுப்பாய்வு முறைகளையோ இருத்தலியல் கருதுகோள்களையோ கொண்டு இவ்வுலகுக்குள் அவன் நுழைவானாயின் அபத்தமான ஒற்றைப்படையான நாவல்களையே எழுதமுடியும்.

மார்க்சியக்கொள்கைகளையே சட்டகமாகக் கொண்டு எழுதப்படும் முற்போக்கு எழுத்திற்கும் பிராய்டிய கொள்கையைச் சட்டகமாகக்கொண்டு எழுதப்படும் நவீனத்துவ எழுத்திற்கும் அடிப்படையில் என்ன வேறுபாடு? அது தட்டையான கருத்துப் பிரச்சாரமாக ஆகும்போது இது எப்படி கலைப்படைப்பாகவும், உள ஆய்வாகவும் ஆகமுடியும்?


எழுத்தாளன் ஒன்று வரலாற்றுப் பிரக்ஞையுடன் தத்துவப்பிரக்ஞையுடன் தந்தை எனும் கருதுகோள் பல்லாயிரம் வருடங்களாக இங்கு எவ்வாறு நிலை பெற்றது ஆட்கொள்கிறது நீடிக்கிறது என்பதை உசாவி எழுதலாம். பிரதர்ஸ் கரமசோவ் போன்ற ஒரு பெரும்படைப்பாக அது மாறலாம். அன்றி நீலபத்மநாபன் எழுதுவது போல எந்த மேலதிக வாசிப்பும் தத்துவ உசாவலும் வரலாற்றுணர்வும் இன்றி தன்னை மட்டுமே

நேர்மையாக வைக்கும் கள்ளமற்ற ஒரு வகையான எழுத்துமுறைக்குச் செல்லலாம்.

அத்தகைய ஒரு படைப்பு உருவாகும்போது அதன்மேல் எளிமையான ஃப்ராய்டிய ஒற்றைச்சட்டகத்தைப் போடுவதென்பது மார்க்ஸியர் எந்த நூல் கையில் கிடைத்தாலும் தங்கள் கருத்தியல் அளவுகோல்களை போட்டுப்பார்க்கும் இயந்திரத்தனத்திற்கு நிகரானது. நான் அன்று சுந்தர ராமசாமியிடம் விவாதித்துவிட்டு வீட்டுக்கு வந்தபின் விரிவாக அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். நாகர்கோயிலில் இருந்தே நாகர்கோயில் விலாசத்துக்குக் கடிதம். அதெல்லாம் அன்று சாதாரணம்.

நீல பத்மநாபன்

https://www.sirukathaigal.com/%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D/%E0%AE%A8%E0%AF%80%E0%AE%B2-%E0%AE%AA%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%AE%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%AA%E0%AE%A9%E0%AF%8D/



நீல பத்மநாபன் (பிறப்பு: சூன் 24, 1938, கன்னியாக்குமரி மாவட்டம்), தமிழகத்தின் ஒரு முன்னணி எழுத்தாளர். புதினம், சிறுகதை, கட்டுரை, கவிதை என பல வகைகளிலும் எழுதுபவர். இலை உதிர் காலம் புதினத்துக்காக 2007ஆம் ஆண்டின் தமிழ் நூல்களுக்கான சாகித்திய அகாதமி விருது விருது பெற்றுள்ள நீல பத்மநாபன், பொறியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது திருவனந்தபுரத்தில் வசித்து வருகிறார். இவரின் படைப்புகள் கடந்த 25 ஆண்டுகளாக நவீனத்துவ

வடிவ இலக்கணத்தால் மதிப்பிடப்பட்டு எதிர்மறைகள் சுட்டப்பட்டுள்ளன.

தமிழில் மூத்த தலைமுறை எழுத்தாளர்களில் ஒருவரான நீல. பத்மநாபன் தமிழில் ஓர் அசலான படைப்பாளி. இதுவரை "தலைமுறைகள்" "தேரோடும் வீதி" "பள்ளிக் கொண்டபுரம்" "உறவுகள்" உள்ளிட்ட இருபது நாவல்களும், 150-க்கும் மேற்பட்ட சிறுகதைகளும் எழுதி இருக்கிறார். இதில் ஒரு நாடகத்தையும் சேர்த்துக் கொள்வது அவசியம்.

2004-ஆம் ஆண்டு மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதெமி விருதினைப் பெற்ற இவர், தமிழிலிருந்து ஆங்கிலம், மலையாளத்திலிருந்து தமிழ் என்று மொழிபெயர்ப்புகளிலும் இயங்கி வருகிறார். திருவனந்தபுரத்தில் 1938-ல் பிறந்த நீல.பத்மநாபன் மின்வாரியத்துறையில் இன்ஜினீயராக இருந்து ஓய்வு பெற்றவர். இவரது துணைவியார் பெயர்: கிருஷ்ணம்மாள். இவரது மகள் வழிப் பேரன் பள்ளி வயதிலேயே ஆங்கிலத்தில் சிறுகதைத் தொகுப்பு ஒன்றை எழுதி வெளியிட்டிருக்கிறான். பேரன் ஒரு லண்டன் வாசி. அந்தக் கதைத் தொகுதிக்கு நீல.பத்மநாபன் முன்னுரையும் வழங்கி இருக்கிறார். திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத் தலைவர் பதவி உள்ளிட்ட பல பதவிகளில் இயங்கியவர். ராஜராஜன் விருது, ராஜா சர் அண்ணாமலை செட்டியார் விருது போன்ற விருதுகளைப் பெற்றவர். இவரது படைப்புகள் ஆங்கிலம், ஜெர்மன், ருஷ்யன் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பரவலான கவனத்தைப் பெற்றிருக்கின்றன.

இதுவரை நீல.பத்மநாபன் எழுதி அச்சில் வெளி வந்த பக்கங்கள் மொத்தம் 6467. இவரது சமீபத்திய நாவலான "இலையுதிர் காலம்" இந்தக் கணக்கெடுப்பில் சேர்க்கப்படவில்லை. இவரை பற்றிய டாக்குமெண்டரியை சாகித்ய அகாதெமி இயக்கி வெளியிட்டிருக்கிறது. இந்த வருடத்திற்கான (2007) சாகித்ய அகாதெமி விருது இவரது "இலையுதிர் காலம்" நாவலுக்கு வழங்கப்பட்டிருப்பதை ஒட்டி இச்சந்திப்பு திருவனந்தபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நிகழ்ந்தது. "எல்லோரையும் போலவே ஓர் எழுத்தாளனுக்கும் தெரியாத விஷயங்கள் பல இருக்கும். அதை வெளிச்சம் போட்டுக் காட்டுவதல்ல ஒரு சிறந்த நேர்காணல். அவனுக்குத் தெரிந்த அனுபவங்களை அவனது வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளும் அளவில் அமைவதே ஒரு தேர்ந்த நேர்காணல்" என்ற அளவீட்டில் இயங்கும் நீல.பத்மநாபன் அந்த வரம்பில் நின்றே பல கருத்துக்களை இந்நேர்காணலில் பகிர்ந்திருக்கிறார்.

புதினங்கள்

- தலைமுறைகள் – 1968

- பள்ளிகொண்டபுரம் – 1970
- பைல்கள் – 1973
- உறவுகள் – 1975
- மின் உலகம் – 1976
- நேற்று வந்தவன் – 1978
- உதய தாரகை – 1980
- பகவதி கோயில் தெரு – 1981
- போதையில் கரைந்தவர்கள் – 1985

சிறுகதைகள்

- மோகம் முப்பது ஆண்டு – 1969
- சண்டையும் சமாதானமும் – 1972
- மூன்றாவது நாள் – 1974
- இரண்டாவது முகம் – 1978
- நாகம்மா – 1978
- சத்தியத்தின் சந்நிதியில் – 1985
- வான வீதியில் – 1988

கவிதைகள்

- நீல பத்மநாபன் கவிதைகள் – 1975
- நா காக்க – 1984

கட்டுரைகள்

- சிதறிய சிந்தனைகள் – 1978

இலக்கிய பார்வைகள்

- திரட்டு நூல் – குரு சேத்திரம் – 1976
- தற்கால மலையாள இலக்கியம் தமிழ் – 1985

காணொளிகள்

01] **ஜீவகாருண்யம் ஸ்ரீ நீல பத்மநாபன் எழுதிய சிறுகதை**
https://www.youtube.com/watch?v=dus3XrEfloU [15:11]
02] **மண்ணின் மகன் ஸ்ரீ நீல பத்மநாபன் எழுதிய சிறுகதை**

https://www.youtube.com/watch?v=9EQIlFix1Tw [10:59]

03] **Sandiyakai by Shri Neela Padmanabhan**

https://www.youtube.com/watch?v=MFltiNwZHAw [9:09]


Padmanabhan was born in Kanyakumari District. He obtained a B. Sc in Physics and a degree in Electrical Engineering from Kerala University. He worked in the Kerala State Electricity Board till his retirement in 1993. His first noted work was the novel Thalaimuraigal (lit. Generations). Besides Tamil and Malayalam, he also has a few English works to his credit. During 1985-89 he was the Tamil editor at Sahitya Akademi and was the convener of the Akademi's Tamil advisory board during 1998-2002. In 2007, he was awarded the Sahitya Akademi Award for Tamil for his novel Ilai uthir kaalam (lit. Autumn). He had earlier won the Akademi's award for translators in 2003 for his translation of Ayyappa Paniker's works into Tamil. In 2010, his novel Thalaimuraigal was made into a Tamil film titled Magizhchi (lit. Happiness). His most noted work is his novel Pallikondapuram


04] Mannin Magan short story by Shri Neela Padmanabhan recited by Preethi Chandra


https://www.youtube.com/watch?v=KG7mPNudxlk [10:59]


05] Story Outline of Neela Padmanabhan's novel - Generations (தலைமுறைகள்)


https://www.youtube.com/watch?v=rFt0edIfbm8 [18:18]











(😊)(😊) **நீல பத்மநாபன்** (😊)(😊)